REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
E Paper
மின்னிதழ்
2024 ஜனவரி 27 சனிக்கிழமை
தினகரன்
THINAKARAN
තිනකරන්
வரு. 92 இல. 24 | Saturday 27, January, 2024 | 09பக்கங்கள் | 50/-

## ரயிலில் செல்ஃபி எடுக்க முற்பட்ட ரஷ்ய பெண் தவறி விழுந்து காயம்

லோரன்ஸ் செல்வநாயகம்



ரயிலில் பயணித்துக்கொண்டிருந்த போது செல்ஃபி எடுக்க முற்பட்ட ரஷ்யப் பிரஜையான பெண் ஒருவர் நேற்று (26) காலை ரயிலிலிருந்து தவறி விழுந்து படுகாயமடைந்துள்ளார். எல்ல கல்பிங்கய பிரதேசத்தில் ரயில் 06

### மாற்று யோசனைகள் இருக்குமாயின்

# சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடலுக்கு தயாராகுங்கள்

## கட்சித் தலைவர்களுக்கு ஜனாதிபதி அழைப்பு

லோரன்ஸ்செல்வநாயகம்

சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பது தொடர்பில் அதன் முகாமைத்துவப் பணிப்பாளருடன் கலந்துரையாடலில் பங்கேற்குமாறு பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்திலிருந்து இலங்கை விலகிக்கொண்டால் நாட்டின் பொருளாதாரம் தொடர்பில் மீண்டும் நம்பிக்கை வைக்க முடியாது என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அனைவரும் ஒன்றிணைந்து பொதுவான உடன்படிக்கையுடன் நாட்டை வெற்றிப்பாதையில் கொண்டு செல்வது அவசியம் என்றும் தெரிவித்தார்.

அத்துடன், தேர்தலுக்கு தயாராகும் நிலையில் நாட்டை எவ்வாறு கட்டியெழுப்புவது என்பது தொடர்பான திட்டம் அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் இருக்க வேண்டும் எனவும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

சுங்கத் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற சர்வதேச சுங்க தின நிகழ்வில் உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

2023ஆம் ஆண்டில் பெறப்பட்ட வரி வருமானத்துக்காக சுங்கத் திணைக்களத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும் நன்றி தெரிவித்த ஜனாதிபதி, சுங்கவரி மற்றும் வற்வரி, வருமானவரி ஆகிய மூன்றும் உலகின் ஒவ்வொரு நாட்டிலும் முக்கிய வருமான மூலங்கள் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். 06

**தேர்தலுக்கு தயாராகும் அரசியல் கட்சிகளிடம் நாட்டை முன்னேற்றுவதற்கான திட்டம் இருக்க வேண்டும்**



சுங்கத் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற சர்வதேச சுங்க தின நிகழ்வில் சுங்கப் பணிப்பாளர் நாயகம் சரத் நோனிஸ் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நினைவுப் பரிசொன்றை வழங்கிவைப்பதைப் படத்தில் காணலாம்.



03

## கச்சதீவு திருவிழாவில் கலந்துகொள்ள மூவாயிரம் தமிழக பக்தர்கள் விண்ணப்பம்

### ஒன்பதாவது பாராளுமன்றத்தின்

## நான்காவது கூட்டத்தொடர் நேற்று நள்ளிரவுடன் நிறைவு

### ஜனாதிபதியினால் விஷேட வர்த்தமானி வெளியீடு

லோரன்ஸ் செல்வநாயகம்

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் நான்காவது கூட்டத்தொடர் நேற்று நள்ளிரவுடன் நிறைவு செய்யப்பட்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. பாராளுமன்றத்தின் நான்காவது கூட்டத்தொடர் நேற்று நள்ளிரவுடன் அமுலுக்கு 06





கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலை வாகன விபத்தில் உயிரிழந்த இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் பூதவுடல் நேற்று அவரது புத்தளம் ஆரய்ச்சிக்கட்டுவ இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வரை அங்கு மக்கள் அஞ்சலிக்காக பூதவுடல் வைக்கப்பட உள்ளது.

## எதிர்காலத்திலும் இந்திய உதவி தொடருமென்று நம்புகிறோம்

### குடியரசுதின வாழ்த்துச் செய்தியில் அமைச்சர் ஜீவன் தொண்டமான்



அனைத்து வழிகளிலும் உதவி வரும் இந்தியாவின் உதவிகள் எதிர்காலத்திலும் தொடருமென்று உறுதியாக நம்புவதாக, இ.தொ.காவின் பொதுச் செயலாளரும் நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

இந்தியாவின் 75ஆவது குடியரசுதினம் நேற்றைய தினம் கொண்டாடப்பட்ட நிலையில், அமைச்சர் ஜீவன் தொண்டமான் விடுத்த வாழ்த்துச் செய்தியிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சரின் வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,

"ஒட்டுமொத்த உலகுக்குமே அஹிம்சையை போதித்த நாடு பாரத தேசமாகும். ஜனநாயகத்தின் இருப்பிடமாகவும் அந்த நாடு கருதப்படுகின்றது. இன்று உலகில் பலமான பொருளாதாரத்தை கொண்டுள்ள 06



இந்தியாவின் 75ஆவது குடியரசு தினத்தையொட்டி நேற்றுக் காலை கொழும்பு இந்தியன் இல்லத்தில் இந்திய உயர் ஸ்தானிகர் ஸ்ரீ சந்தோஷ் ஜா தேசிய கொடி ஏற்றியபோது பிடிக்கப்பட்ட படம். (படம்: சுதத் நிசாந்த)

## லிட்ரோவின் வருமானத்தில் ரூ. 1.5 பில்லியன் திறைசேரிக்கு



லிட்ரோ நிறுவனம் 2023ஆம் ஆண்டில் பெற்றுக்கொண்ட வருமானத்திலிருந்து 1.5 பில்லியன் ரூபாவை திறைசேரிக்கு வழங்குவதற்கான காசோலையை தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ், 06

## நிகழ்நிலை காப்பு சட்டத்தின் மூலம் சுயலாபம்பெறுவது அரசின் நோக்கமல்ல

### வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ



லோரன்ஸ் செல்வநாயகம்

நிகழ்நிலை காப்புச் சட்டத்தின் மூலம் சமூக ஊடகங்களை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளோ அல்லது இல்லாதொழிக்கும் நடவடிக்கைகளோ முன்னெடுக்கப்பட மாட்டாதென, வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார். 06

### கனடாவில் தொழில்வாய்ப்பு

## 6 கோடி ரூபாவை மோசடி செய்த 37 வயதுடைய பெண் கைது

லோரன்ஸ் செல்வநாயகம்

கனடாவில் தொழில்வாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி 6 கோடி ரூபாவுக்கும் அதிகளவான பணத்தை மோசடியாக பெற்றுக்கொண்ட குற்றச்சாட்டில் பெண் ஒருவரை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

பேலியகொடை மீன் சந்தையில் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டு வரும் நபர் ஒருவர், கனடாவில் தொழில் வாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி 06

### உமாஓயா திட்டத்தின் கீழ்

## பெப்ரவரி மாதம் 120 மெகாவோட் மின்சாரம் தேசிய மின் கட்டமைப்பில் சேர்க்கப்படும்

### நீர்ப்பாசன இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ



உமாஓயா திட்டத்தின் கீழ் பெப்ரவரி 15ஆம் திகதி முதல் 120 மெகாவோட் மின்சாரத்தை தேசிய மின் கட்டமைப்பில் சேர்க்க திட்டமிடப்பட்டுள்ளதாக நீர்ப்பாசன இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ தெரிவித்தார். மேலும், 31 நீர்த்தேக்கங்கள் 06

## ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் புதிய கூட்டணி

### சந்திரிகாவை தலைவராக்கவும் தீர்மானம்

லோரன்ஸ் செல்வநாயகம்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினால் ஆரம்பிப்பதற்கு உத்தேசித்துள்ள புதிய கூட்டணியின் தலைவராக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை நியமிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், அதற்கு அவர் இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் கட்சியின் முக்கியஸ்தரொருவர் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை அடிப்படையாகக் கொண்டு புதிய 06

### கட்டுநாயக்க நெடுஞ்சாலையில் விபத்து

## வெளிநாட்டு பிரஜை பலி; மூவர் படுகாயம்

லோரன்ஸ் செல்வநாயகம்




கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையில் நேற்று (26) அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் வெளிநாட்டுப் பிரஜை ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், 3 பேர் படுகாயமடைந்துள்ளதாக, அதிவேக நெடுஞ்சாலை போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர். கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையில் கடவத்தைக்கும் கெரவலப்பிட்டிக்கும் இடையில் 27.01 மைல்கல் பிரதேசத்தில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதுடன், இந்த விபத்தில் 37 வயதுடைய ஒஸ்ட்ரிய நாட்டுப் பிரஜை உயிரிழந்துள்ளார்.

விபத்தில் உயிரிழந்தவரின் தாயார் உட்பட படுகாயமடைந்த மூவரும் இராகமை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். 06

## வடக்கு, கிழக்கு, ஊவாவில் காலநிலையில் மாற்றம்

### வளிமண்டலவியல் திணைக்களம்

லோரன்ஸ் செல்வநாயகம்



தற்போது வடக்கு, வடமத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் நிலவி வரும் வரட்சியான காலநிலையில் இன்றுடன் மாற்றம் ஏற்படுமென, வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

அந்த வகையில் இன்றையதினம் நாட்டின் பல்வேறு இடங்களில் மழையுடன் கூடிய காலநிலை நிலவுமெனவும், அத்திணைக்களம் தெரிவித்தது.

இதேவேளை, நுவரெலியா மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் நேற்றுக் காலை ஐஸ் மழை பொழிந்துள்ளதாகத் தெரிவித்த வளிமண்டலவியல் திணைக்களம், இன்றையதினமும் சில இடங்களில் ஐஸ் மழை பொழிவதற்கான சாத்தியக்கூறு உள்ளதாகவும் தெரிவித்தது.

இதற்கமைய மத்திய, சப்ரகமுவ, மேல் மற்றும் ஊவா 06

# யாழில் இந்திய குடியரசு தின நிகழ்வுகள்







(பருத்திதுறை விசேட, யாழ்ப்பாணம் குறூப், யாழ் நிருபர்கள்)

இந்தியாவின் 75 ஆவது குடியரசு தின நிகழ்வுகள் யாழ்ப்பாண இந்திய துணை தூதுவராலயத்தில் சிறப்பாக நடைபெற்றது.

இந்திய எல்லைப்படையினரின் அணிவகுப்பு மரியாதையுடன் யாழ். இந்திய துணைத்தூதுவர் அழைத்து வரப்பட்டு, இந்திய தேசிய கொடி ஏற்றலுடன் ஆரம்பமான இந்நிகழ்வில் இந்திய குடியரசுத் தலைவரின் சிறப்புரையினை யாழ்ப்பாண இந்திய துணைத் தலைவர் ராகேஷ் நடராஜ் ஜெயபாஸ்கரன் வாசித்ததுடன் கலை நிகழ்வுகளும் நடைபெற்றன. குடியரசு தின நிகழ்வில் இந்திய துணை தூதுவராலய அதிகாரிகள் இந்திய பிரஜைகள் என பலரும் கலந்து கொண்டனர்.

## வடக்கின் உதயம்

## மன்னாரில் கவனயீர்ப்பு போராட்டம்

(தலைமன்னார் விசேட நிருபர்)

மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும்அபிவிருத்தித் திட்டங்களால் மக்களின் இருப்பு, வாழ்வாதாரம், இயற்கை வளங்கள் பாதிக்கப்பட்டு வருவதாக தெரிவித்து நேற்று மன்னாரில் மாபெரும் கவனயீர்ப்பு போராட்டமொன்று நடைபெற்றது. பதாகைகளை ஏந்தியவாறு கோஷமிட்டு கவனயீர்ப்பு போராட்டத்தில் மக்கள் ஈடுபட்டனர்.



'மணல் அகழ்வை நிறுத்தாவிடில் நன்னீர் மாசடைவதுடன் உப்புத்தன்மையும் அதிகரிக்கும்', 'மன்னார் சுற்றுச்சூழலை பாதுகாக்க அனைவரும் ஒன்றிணைவோம்', 'கனியவள மணல் அகழ்வு மன்னார் மக்களின் வாழ்வாரத்தை அழித்து விடும்' போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். மன்னார் பிரதான பாலத்தில் ஆரம்பமாகிய மக்கள் பேரணி மாவட்ட செயலகம் முன்பாக சென்று அங்கு கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில் நடைபெற்ற கவனயீர்ப்பு போராட்டத்தில் மதத் தலைவர்கள், வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன், வடக்கு தெற்கு முக்கியஸ்தர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதைத் தொடர்ந்து மன்னார் மாவட்ட செயலகத்துக்கு சென்ற ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்குமாறு மகஜர் ஒன்றையும் மன்னார் மேலதிக அரசாங்க அதிபரிடம் கையளித்தனர்.

## இளைஞனை வீதியில் வழிமறித்து வன்முறை கும்பல் தாக்குதல்

(யாழ்.விசேட நிருபர்)

கொள்ளை சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த பின்னர் வீடு திரும்பிக் கொண்டிருந்த இளைஞனை வீதியில் வழிமறித்து வன்முறை கும்பலொன்று வாள் வெட்டுத் தாக்குதல் நடாத்தியுள்ளது.

யாழ்ப்பாணம் வடமராட்சி பகுதியைச் சேர்ந்த ஜெயக்கொடி (வயது 30) எனும் இளைஞனே தாக்குதலுக்கு இலக்கான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இளைஞன் வாகனத்தில் சென்று ஐஸ்கிறீம் விற்கும் போது மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர்கள் ஐஸ்கிறீம் வாங்குவது போல பாசாங்கு செய்து, இளைஞனின் உடைமையிலிருந்த பணம், கைபேசி என்பவற்றை கொள்ளையடித்து சென்றிருந்தனர்.

இதுதொடர்பில் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் இளைஞன் முறைப்பாடு செய்த பின்னர் தனது வீடு நோக்கி சென்று கொண்டிருந்த வேளை, அல்வாய் பகுதியில் இளைஞனை வழிமறித்த கும்பலொன்று வாள் வெட்டுத் தாக்குதலை நடாத்திவிட்டு தப்பி சென்றுள்ளது.

வாள் வீட்டுக்கு இலக்கான இளைஞன் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதுடன் நெல்லியடி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## மன்னார் பொது வைத்தியசாலையில் சிரமதானம்

(தலைமன்னார் விசேட நிருபர்)

மன்னார் மாவட்டச் செயலகமும் திணைக்கள உத்தியோகத்தர்களும் இணைந்து மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் பாரிய சிரமதான பணிகளை நேற்று முன்னெடுத்தனர்.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை சுற்று சூழலால் டெங்கு அபாயம் காணப்படுவதாக பொதுமக்கள் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரின் கவனத்துக்கு கொண்டு வந்திருந்தனர்.

இவற்றை கவனத்துக்கு எடுத்திருந்த மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க. கனகேஸ்வரன், மன்னார் பொது வைத்தியசாலையில் நேரில் சென்று பார்வையிட்ட பின்னர் இது தொடர்பாக நடவடிக்கை எடுத்தார்.





தைப்பூச திருவிழா நேற்றுமுன்தினம் மாலை யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றது. நல்லூர் கந்தன் மஞ்சத்தில் எழுந்தருளி பக்த கோடிகளுக்கு அருள்பாலித்திருந்தார்.
(படங்கள்: யாழ். விசேட நிருபர்)

## அதீத போதைப்பொருள் பாவனையால் ஒருவர் பலி

(யாழ். விசேட நிருபர்)

யாழ். நகரை அண்மித்த கலட்டி பகுதியில் அதீத போதைப்பொருள் பாவனையால் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

கலட்டி பகுதியில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இளைஞர் ஒருவர் வீட்டிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட பிரேதபரிசோதனையிலேயே இளைஞன் போதைப்பொருளை அதிக அளவில் நுகர்ந்தமையால் மரணம் ஏற்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் சாவகச்சேரி பகுதியிலும் இதேபோன்று இளைஞர் ஒருவர் போதைப்பொருள் பாவனையால் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

பொலிஸாரின் யுக்திய சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் யாழ்ப்பாணத்தில் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் போதைப்பொருள் பாவனையால் இரு மரணங்கள் ஏற்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

## கொடிகாமத்தில் பொங்கல் விழா

(சாவகச்சேரி விசேட நிருபர்)

கொடிகாமம் வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கமும் சிறுவர் கழகமும் இணைந்து நடத்திய மாபெரும் பொங்கல் விழா நிகழ்வுகள் அண்மையில் கொடிகாமம் வடக்கு ஐயனார் கோவில் முன்றலில் இடம் பெறறது.

பிரதேசசபை முன்னாள் உறுப்பினரும் கிராம அபிவிருத்திச் சங்க செயலாளருமான வை.ஜெகதாஸ் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைப்பாளர் எந்திரி சாந்தாதேவி மற்றும் கொடிகாமம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரணசிங்க ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.



மேலும் சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சிப் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் லலிதசங்கர்,வேள்ட்விஷன் நிறுவன இணைப்பாளர் யூட் நிஷாந்தன், வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாலய முதல்வர் வை.விஜயகுமார் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக கொடிகாமம் வடக்கு கிராமத்தின் கிராம உத்தியோகத்தர் கு.பரமானந்தம், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் செ.சுதாகர், சமுர்த்தி உத்தியோகத்தர் திருமதி ம. சிந்துஜா, வேள்ட்விஷன் நிறுவன திட்ட உதவியாளர் டோமினிக்சரலே மற்றும் கொடிகாமம் ஐயனார் ஆலய தர்மகர்த்தா செ.பொன்னையா ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

இதன்போது பொங்கல் விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டன.

## தமிழரசுக் கட்சி தலைவருக்கு மன்னாரில் அமோக வரவேற்பு





(தலைமன்னார் விஷேட நிருபர்)

இலங்கை தமிழரசுக் கட்சியின் ஒன்பதாவது தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ள கிளிநொச்சி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரனுக்கு கட்சி ஆதரவாளர்களால் மன்னாரில் அமோக வரவேற்பளிக்கப்பட்டது. மன்னாரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வரவேற்பு வைபவத்தில் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் எஸ்.சிறிதரன் மற்றும் அதிதிகள் ஆகியோர் தந்தை செல்வாவின் சிலைக்கு மலர் மாலை அணிவித்ததைத் தொடர்ந்து மன்னார் தமிழரசுக் கட்சியின் அலுவலக முன்றலில் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தலைமையில் வரவேற்பு நிகழ்வுகள் நடைபெற்றன.

இதில் மன்னார் மாவட்ட தமிழரசுக் கட்சி சார்ந்தவர்கள் கலந்து கொண்டதுடன் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிறிநேசன், அரியநேந்திரன், அம்பாறை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கோடிஸ்வரன், உட்பட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றினர்.







கண்டி உதவி இந்தியத் தூதுவர் டொக்டர் எஸ். ஆதிரா தலைமையில் கண்டி வாவிக் கரையில் இந்தியாவின் 75 வது குடியரசு தின நிகழ்வுகள் நடைபெற்றன. இதில் கண்டி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார், அஸ்கிரிய மல்வத்தை பீடங்களின் மகாநாயக்க மற்றும் அனுநாயக்கத் தேரர்கள், பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் பாரத்அருள் சாமி, உட்பட பலரும் கலந்து கொண்டனர். (படங்கள்; அக்குறணை குறூப் நிருபர்)

## மலைச்சாரல்

## மரத்திலிருந்து வீழ்ந்து 66 வயது நபர் மரணம்

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

மங்கூஸ் பழம் பறிப்பதற்கு மரத்திலேறிய 66 வயது நபரொருவர் அதிலிருந்து வீழ்ந்து உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் நேற்று பெல்மதுள சிங்கபுர பட்டலந்த என்ற இடத்தில் இடம் பெற்றுள்ளது. பகலுணவுக்கு பின்னர் மங்கூஸ் பழம் பறிப்பதற்காக வீட்டுக்கு அண்மையிலிருந்த மரத்தில் ஏற சென்றதாகவும் சிறிது நேரத்தில் வீட்டுக்கு வெளியே வித்தியாசமான சத்தமொன்று கேட்டு மனைவி சென்று பார்த்த போது இவர் சுயநினைவின்றி இருந்துள்ளார்.

இவரை வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போதும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

பியகமவை முன்மாதிரியாக கொண்டு

# அடுத்த சில வருடங்களுக்குள் நாட்டை முன்னேற்றுவதாக ஜனாதிபதி உறுதி

பியகமவை முன்மாதிரியாகக் கொண்டு அடுத்த சில வருடங்களுக்குள் நாட்டை முன்னேற்றுவதாக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

தனது அரசியல் வாழ்க்கையை ஆரம்பித்த பியகம தேர்தல் தொகுதிக்கு அன்று தான் வந்தபோது அப்பிரதேசம் மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்ததை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, பியகம முதலீட்டு வலயத்தை நிறுவுதல் உள்ளிட்ட சரியான பொருளாதார தீர்மானங்களால் பியகம மிகக் குறுகிய காலத்தில் பெரும் முன்னேற்றத்தை அடைந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

அதே முறையில் திறந்த பொருளாதாரத்தில் முழுமையாக பயனடையும் வகையில் நாடு முழுவதும் புதிய முதலீட்டு வலயங்களை உருவாக்கி, தேசிய பொருளாதாரத்தை பத்து மடங்குகளாக மேம்படுத்த நடவடிக்கை எடுப்பதாகவும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

சபுகஸ்கந்த அபேசேகரராமவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட போதி மதில் மற்றும் தங்கவேலி திறப்பு நிகழ்வில் நேற்று முன்தினம் (25) கலந்து கொண்ட போதே, ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.



இந் நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய ஜனாதிபதி,

"பொதுத்தேர்தலுக்கு முந்தையநாள் இரவு அபேசேகரராமவை தரிசித்து ஆசிர்வாதம் வாங்க வேண்டுமென்று அம்மா கூறினார். அதன்படி விகாரைக்கு வந்து ஆசி பெற்றேன். தேர்தல் முடிவுகளை மீண்டும் கூற வேண்டிய அவசியம் இல்லை. எனது அரசியல் வாழ்க்கை இந்த இடத்திலிருந்து ஆரம்பித்தது. அந்த அரசியல் பயணம் இன்று ஜனாதிபதி பதவியை எட்டியுள்ளது. நான் புதிய வழியில் ஜனாதிபதி பதவிக்கு வந்தேன். அரசாங்கம் வீழ்ந்த போது எவரும் பொறுப்பேற்க முன்வராத வேளையில் நான் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டேன்.

அப்போது நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சி அடைந்திருந்ததால் நான் நாட்டைப் பொறுப்பேற்றேன். அந்த நிலை தொடர்ந்தால் இந்த நாட்டின் இருப்பு கேள்விக்குறியாகி விடும். எனவே, நாட்டை காப்பாற்றி பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டுமென்பதற்காகவும் அதனை செய்ய முடியுமென்ற நம்பிக்கை இருந்ததாலும் ஜனாதிபதி பொறுப்பை ஏற்றுக்கொண்டேன்.

இப்போது இரண்டு ஆண்டுகள் கடந்து விட்டன. இன்று படிப்படியாக நாடு இயல்பு நிலைக்கு திரும்புகிறது. பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதில் ஏற்படும் பிரச்சினைகளை நாம் எதிர்கொள்ள வேண்டியிருக்கின்றது. தற்போது அந்நிலையிலிருந்து படிப்படியாக முன்னேறி வருகிறோம்.

புதிய தொழில்துறைகள் மற்றும் புதிய முதலீட்டு வாய்ப்புகளை உருவாக்கி மக்களுக்கு தொழில் வாய்ப்பை வழங்க வேண்டும். அதற்கான தகுந்த சூழலை உருவாக்கும் முயற்சியில் தற்போது ஈடுபட்டுள்ளோம். நாடு முழுவதும் பியகம முதலீட்டு வலயம் போன்ற முதலீட்டு வலயங்களை உருவாக்கி நாட்டின் பொருளாதார வேகத்தை 10 மடங்குகளாக அதிகரிக்க திட்டமிட்டுள்ளோம்.

மேலும், இந்த அபிவிருத்தியை நாட்டின் ஏனைய பிரதேசங்களிலும் செய்ய திட்டமிட்டுள்ளோம். பிங்கிரிய, கண்டி, ஹம்பாந்தோட்டை, திருகோணமலை, வடக்கு உள்ளிட்ட பகுதிகளை முதற்கட்டமாக அடையாளம் கண்டிருக்கிறோம். எனவே, திறந்த பொருளாதாரத்தை பயன்படுத்தி, தேசிய பொருளாதாரத்தை பத்து மடங்குகளாக உயர்த்த திட்டமிட்டுள்ளோம்" எனத் தெரிவித்தார்.

# யாழ். காரைநகரில் மீன்பிடித்த 12 தமிழக மீனவர் விடுதலை

**(நாகர் கோவில் விசேட, கரவெட்டி தினகரன் நிருபர்கள்)**



இலங்கை கடற்பரப்பில் எல்லை தாண்டி மீன்பிடித்த சம்பவம் தொடர்பாக குற்றஞ்சாட்டப்பட்ட 12 தமிழக கடற்றொழிலாளர்களை ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது.

இந்த கடற்றொழிலாளர்கள் 12 பேருக்கும் தலா 18 மாத சாதாரண சிறைத் தண்டனை விதித்து, அதை ஐந்தாண்டுகளுக்கு ஒத்திவைத்து, நிபந்தனைகளுடன் ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது.

தமிழகத்தின் புதுக்கோட்டை மாவட்டத்தின் கோட்டைப்பட்டினம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து இவர்கள் மீன் பிடிப்பதற்காக வந்தது டன், கடந்த டிசெம்பர் மாதம் 13ஆம் திகதி யாழ். காரைநகர் கடற்பரப்பில் இவர்களை கடற்படையினர் கைது செய்திருந்தனர்.

இதனைத் தொடர்ந்து இக்கடற்றொழிலாளர்கள் 12 பேரையும் ஊற்காவற்றுறை நீதவான் நீதிமன்றத்தில் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் ஆஜர்படுத்திய போதே, இவர்களை நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது.

இவர்கள் மீது யாழ்ப்பாண நீரியல் வளத்துறை அதிகாரிகள், நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளனர்.

வழக்கை விசாரணை செய்த ஊற்காவற்றுறை நீதவான் நீதிமன்ற நீதவான் ஜே.கஜநிதிபாலன், இக் கடற்றொழிலாளர்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட மூன்று குற்றச்சாட்டுகளுக்கும், தலா ஆறு மாதமென்ற அடிப்படையில் 18 மாதகால சாதாரண சிறைத் தண்டனை விதித்து, அதை ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைத்து தீர்ப்பளித்துள்ளார்.




இந்தியாவின் 75ஆவது குடியரசுதினத்தையொட்டி கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் ஏற்பாடு செய்த கலாசார நிகழ்வில் விசேட அதிதியாக கலந்துகொண்ட போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் பந்துல குணவர்தன நடனமாடியவர்களுக்கு பரிசில்கள் வழங்குவதையும் இலங்கைக்கான புதிய இந்திய உயர்ஸ்தானிகர் ஸ்ரீசந்தோஷ் ஜாவுடன் கலந்துரையாடுவதையும் படங்களில் காணலாம்.

# பெலியத்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம்; மேலும் இருவர் கைது

பெலியத்த பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் 5 பேர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக மேலும் இரு சந்தேக நபர்களை கைது செய்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

காலியில் வசிக்கும் 25 மற்றும் 35 வயதுடைய இச்சந்தேக நபர்களை நேற்று முன்தினம் (25) பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளதாகத் தெரிவித்த பொலிஸார், பெலியத்தவில் இடம்பெற்ற கொலை சம்பவத்துக்கு உதவிய குற்றச்சாட்டிலேயே இச்சந்தேக நபர்களை கைது செய்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

பெலியத்த பிரதேசத்தில் தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் கடந்த திங்கட்கிழமை (22) காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் 4 பேர் சம்பவ இடத்தில் உயிரிழந்ததுடன்,



மற்றுமொருவர் படுகாயத்துடன் தங்காலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும் உயிரிழந்தார்.

இந்த துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தவர்களில் எமது மக்கள் சக்தி கட்சித் (Ape Jana Bala Pakshaya) தலைவர் சமன் பெரேராவும் அடங்குகின்றார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தி வந்த பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் ஏற்கெனவே ஒரு சந்தேக நபரை கடந்த புதன்கிழமை (24) கைது செய்திருந்தனர்.

# 'யுக்திய' சுற்றிவளைப்பில் 871 சந்தேக நபர்கள் கைது

நாடளாவிய ரீதியில் நேற்று (26) அதிகாலை 12.30 மணிவரை முன்னெடுக்கப்பட்ட 'யுக்திய' சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது, மேலும் 871 சந்தேக நபர்களை பாதுகாப்புப் படையினர் கைது செய்துள்ளதாக, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

இதன்போது சந்தேக நபர்களிடமிருந்து 231 கிராம் ஹெரோயின் போதைப்பொருள், 129 கிராம் ஐஸ் போதைப்பொருள், 222 போதை மாத்திரைகளையும் பாதுகாப்புப் படையினர் கைப்பற்றியுள்ளதாகவும், அந்த அமைச்சு மேலும் தெரிவித்தது.

நாடளாவிய ரீதியில் போதைப்பொருள் பாவனையை இல்லாதொழிக்கும் வேலைத்திட்டத்தின் ஒரு நடவடிக்கையாக 'யுக்திய' சுற்றிவளைப்பு நடவடிக்கையை பாதுகாப்புப் படையினர் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# கச்சதீவு திருவிழாவில் கலந்துகொள்ள மூவாயிரம் தமிழக பக்தர்கள் விண்ணப்பம்

**திருச்சி எம்.கே.ஷாகுல் ஹமீது**



கச்சதீவு புனித அந்தோனியார் தேவாலய திருவிழா எதிர்வரும் பெப்ரவரி மாதம் 23ஆம், 24ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதுடன், திருவிழாவுக்கு தமிழகத்திலிருந்து 3 ஆயிரம் பக்தர்கள் செல்ல மாவட்ட நிர்வாகத்தில் அனுமதி கோரப்பட்டுள்ளதாக இராமேஸ்வரம் பங்குத் தந்தை சந்தியாகு தெரிவித்தார்.

இது தொடர்பாக இராமேஸ்வரம் பங்குத்தந்தை சந்தியாகு ஊடகவியலாளர்களுக்கு தெரிவித்த போது,

"இந்தியா மற்றும் இலங்கை பக்தர்கள் ஒன்றிணைந்து கலந்துகொள்ளும் திருவிழா கச்சதீவு புனித அந்தோனியார் தேவாலய திருவிழாவாகும். இந்தத் திருவிழாவில் தமிழகத்திலிருந்து பக்தர்கள் கலந்துகொள்ள வேண்டுமென்று யாழ்பாணத்திலுள்ள மறைமாவட்ட ஆயர் அழைப்புக் கடிதம் அனுப்பியுள்ளார். இது தொடர்பாக இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியரிடம் தகவல் தெரிவிக்கப்பட்டு, நடப்பு ஆண்டு 75 விசைப் படகுகளில் 3 ஆயிரம் பக்தர்கள் செல்ல அனுமதிக்க வேண்டுமென்று கோரப்பட்டுள்ளது.

இதற்கான பயணக் கட்டமாக ஒரு வருக்கு 2 ஆயிரம் ரூபாவை அறவிட தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், கச்சதீவு புனித அந்தோனியார் தேவாலய திருவிழாவுக்கு செல்லும் பக்தர்களுக்கான விண்ணப்பப்படிவம் 6ஆம் திகதிவரை வழங்கப்படும். அதன் பின்னர் விண்ணப்பப்படிவம் வழங்கப்பட மாட்டாது" எனத் தெரிவித்தார்.

# பின்னணிப் பாடகி பவதாரிணியின் பூதவுடல் சென்னைக்கு!



பிரபல தென்னிந்திய இசையமைப்பாளரும் இசைஞானியுமான இளையராஜாவின் புதல்வி பவதாரிணி சுகயீனம் காரணமாக நேற்று முன்தினம் (25) இரவு இலங்கையில் காலமானார். இந்நிலையில், அவரது பூதவுடல் நேற்று (26) மதியம் 1.45 மணியளவில் சென்னைக்கு கொண்டு செல்லப்பட்டது. அவரது பூதவுடல் சென்னை தியாகராய நகரிலுள்ள அவரது இல்லத்துக்கு கொண்டு செல்லப்பட்டு, மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளதாக, இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்த பவதாரிணி, இலங்கையில் ஆயுர்வேத சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே, தனது 47ஆவது வயதில் காலமானார்.

இளையராஜாவின் இசையில் பாரதி திரைப்படத்தில் 'மயில் போல பொண்ணு ஒன்னு' எனும் பாடலை பாடியமைக்காக அவருக்கு சிறந்த பின்னணிப் பாடகிக்கான தேசிய விருது கிடைத்தமை குறிப்பிடத்தக்கது.

முப்பதுக்கும் மேற்பட்ட திரைப்படங்களில் பல பாடல்களை பாடி பிரபலமாகிய பவதாரிணியின் மரணம் ஒட்டுமொத்த திரையுலகினரையும் அதிர்ச்சியில் உறைய வைத்துள்ளதுடன், அவரது மறைவையிட்டு திரையுலகப் பிரமுகர்கள் பலரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

# பிரதி இன்ஸ்பெக்டர் கௌரவிப்பு நிகழ்வு



தனது சேவையை பூர்த்தி செய்து பதவி உயர்வு பெற்றுச் செல்லும் யாழ்ப்பாண மாவட்ட பொலிஸ் பிரதி இன்ஸ்பெக்டர் எம். ஆர்.மஞ்சுள செனரத் கௌரவிக்கப்படவுள்ளார். இக்கௌரவிப்பு நிகழ்வு இன்று சனிக்கிழமை (27) மாலை 5.00 மணி முதல் இரவு 7.00 மணிவரை இல. 37, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறுமென, ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இந்நிகழ்வுக்கான ஊடக அனுசரணையை தினகரன் மற்றும் தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகள் வழங்குகின்றன.

# இளையராஜாவின் இசை நிகழ்ச்சி மறு அறிவித்தல்வரை ஒத்திவைப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



கொழும்பில் இன்றும் நாளையும் நடைபெறவிருந்த இசைஞானி இளையராஜாவின் இசை நிகழ்ச்சி மறு அறிவித்தல் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக, நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இளையராஜாவின் புதல்வி பாடகி பவதாரிணி மரணமடைந்ததை அடுத்து, இந்த இசை நிகழ்ச்சி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும், அவர்கள் தெரிவித்தனர். இந்த இசை நிகழ்ச்சி ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில், இசை நிகழ்ச்சிக்காக ஏற்கெனவே வழங்கப்பட்ட டிக்கெட்டுகளை மீண்டும் அதற்கான திகதி அறிவிக்கப்படும் போது பயன்படுத்த முடியுமென்றும் இசை ரசிகர்களுக்கு ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்தனர்.

பாடகி பவதாரிணியின் பூதவுடல் நேற்றையதினம் சென்னைக்கு கொண்டு செல்லப்பட்டது. இசையமைப்பாளர் யுவன் சங்கர் ராஜா மற்றும் வெங்கட் பிரபு ஆகியோர் நேற்று முன்தினம் இரவு இலங்கைக்கு வந்ததுடன், அவர்கள் பவதாரணியின் பூதவுடலை பொறுப்பேற்று நேற்று சென்னைக்கு கொண்டு சென்றனர். இசைஞானி இளையராஜாவும் நேற்று நாடு திரும்பியமை குறிப்பிடத்தக்கது.

# லிற்றோ காஸ் நிறுவனத்தை தனியாருக்கு வழங்க கேள்விமனு

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

லிற்றோ காஸ் நிறுவனத்தை தனியாருக்கு வழங்குவது தொடர்பில் அரசாங்கம் டெண்டர் கோரியுள்ளதாக, அந்த நிறுவனத்தின் தலைவர் முதித்த பீரிஸ் தெரிவித்துள்ளார்.

லிற்றோ காஸ் நிறுவனமானது கடந்த வருடத்தில் சுமார் 700 கோடி ரூபாவை இலாபமாக பெற்றுக்கொண்டுள்ளதாக தெரிவித்த அவர், அந்த நிறுவனத்தை தனியாருக்கு விற்பது தொடர்பில் எந்தவிதமான எதிர்பார்ப்பும் தமக்கு கிடையாதென்றும் எனினும் அரசாங்கத்தின் தீர்மானத்துக்கு அழுத்தம் கொடுக்க முடியாதென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டு மக்களின் சமையல் எரிவாயு தேவையை முழுமையாக நிறைவேற்றுவதே நிறுவனத்தின் தலைவர் என்ற வகையில் தமது இலக்காகுமெனத் தெரிவித்த அவர், தேசிய மட்டத்தில் தீர்மானங்களை மேற்கொள்ளும் போது அமைச்சரவையைப் போன்று வேறு தரப்பினரும் தீர்மானங்களை மேற்கொள்வதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரச நிறுவனங்களை தனியார் மயப்படுப்படுத்துவது தொடர்பில் தீர்மானங்களை மேற்கொள்வதற்காக வேறு குழுவொன்று உள்ளதாக தெரிவித்த அவர், அந்தக் குழுவின் தீர்மானம் தொடர்பில் லிற்றோ காஸ் நிறுவனத்தின் தலைவரென்ற வகையில் தமக்கு பொறுப்பு கிடையாதென்பதை சுட்டிக்காட்டினார்.

# வரி செலுத்தாத மதுபான நிறுவன அனுமதியை இடைநிறுத்த கோரி மனு

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

மதுபானவரி செலுத்தாதுள்ள மதுபான உற்பத்தி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரத்தை இடைநிறுத்த உத்தரவு பிறப்பிக்குமாறு கோரியும், இதுவரை வரி செலுத்தாத மதுபான நிறுவனங்களிடமிருந்து வரி அறவிடுவதற்கான உத்தரவை கலால்வரி ஆணையாளர் நாயகத்துக்கு விடுக்குமாறு கோரியும், உச்ச நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சமூக செயற்பாட்டாளரான சஞ்சய மகவத்வ உள்ளிட்ட தரப்பினராலேயே இந்த மனு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில் பிரதிவாதிகளாக கலால்வரி ஆணையாளர் நாயகம் உட்பட அந்த திணைக்களத்தின் அதிகாரிகள், நிதியமைச்சின் செயலாளர், நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் தை மாதம் 13ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ரஜப் பிறை 15

### குறள் தரும் சிந்தனை

பருவத்தோடு ஒட்ட ஒழுகல் திருவினைத்
தீராமை ஆர்க்குங் கயிறு

*காலம் உணர்ந்து அதற்கேற்பச் செயல்படுதல், அந்த நற்செயலின் வெற்றியை நழுவவிடாமல் கட்டிப்பிணிக்கும் கயிறாக அமையும்.*

# வீதிவிபத்துகளை கட்டுப்படுத்த உதவும் CCTV தொழில்நுட்பம்

வீதிகளில் வாகனப் போக்குவரத்துக் குற்றங்களைக் கண்காணிப்பதற்கு CCTV கண்காணிப்பு கமரா தொழில்நுட்பம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வெளியாகியுள்ள தகவல் மக்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இச்செய்தியானது நேர்மையான முறையில் வாகனம் செலுத்துகின்ற சாரதிகள் மற்றும் பாதசாரிகளுக்கு மிகுந்த நிம்மதியை ஏற்படுத்தியிருக்குமென்பதில் எதுவித சந்தேகமுமில்லை.

உலகில் வாகனவிபத்துகளில் மக்கள் உயிரிழக்கின்ற நாடுகளில் இலங்கையையும் பிரதானமாகக் குறிப்பிட முடியும். எமது நாடு சிறியதாக இருந்த போதிலும், சராசரியாக எடுத்து நோக்கினால் அன்றாடம் எட்டு தொடக்கம் பத்துப் பேர் வரை வாகனவிபத்துகளினால் உயிரிழப்பதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவிக்கின்றனர். நாட்டின் மொத்த சனத்தொகையை எடுத்துக் கொண்டால் இந்த உயிரிழப்புகள் அதிகமென்றே கூற வேண்டும்.

நாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலும் வாகனங்களின் எண்ணிக்கை அதிகரிப்புக்கேற்ப, வாகன விபத்துக்களும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. வீதிகள் நன்கு சீரமைக்கப்பட்டுள்ளதன் காரணமாக சாரதிகள் தங்களது வாகனங்களை அதிவேகமாகச் செலுத்துகின்றனர். அதன் காரணமாக வாகனவிபத்துகள் அதிகளவில் இடம்பெறுகின்றன.

அதுமாத்திரமன்றி, தனியார்பஸ்காரர்கள் போட்டி போட்டுக் கொண்டு வாகனம் செலுத்துவதால் பாரதூரமான விபத்துகள் சம்பவிக்கின்றன. தனியார்பஸ் சாரதிகளில் பலர் வீதியில் செல்கின்ற பயணிகளை ஒரு பொருட்டாகவே கருதுவதில்லையென்று பலரும் கூறுகின்றனர். இதுபோன்றுதான் முச்சக்கரவண்டிச் சாரதிகளும் வீதிப்போக்குவரத்து விதிமுறைகளைப் பொருட்படுத்தாமல் வாகனம் செலுத்துகின்றனர். அதேசமயம் மோட்டார்சைக்கிள்களின் எண்ணிக்கையும் நாட்டில் அதிகரித்துள்ளது. வாகனப் போக்குவரத்து விதிகளை மீறுபவர்களில் மோட்டார்சைக்கிளோட்டிகளும் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

நாட்டில் வாகனவிபத்துகள் அதிகரிப்பதற்கு பலவிதமான காரணங்கள் உள்ளன. தனியார்பஸ் சாரதிகளில் சிலர் போதைப்பொருட்களை பாவித்த நிலையில் வாகனங்களைச் செலுத்துவதும் விபத்துக்கான காரணம் என்று பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர். மது போதையில் வாகனம் செலுத்துபவர்களும் பலர் உள்ளதாகத் தெரியவந்துள்ளது. இவ்வாறானவர்கள் தமக்கு மாத்திரமன்றி, தமது பஸ்ஸில் பயணம் செய்பவர்களுக்கும் உயிராபத்தை ஏற்படுத்துகின்றனரென்பதை மறந்து விடலாகாது.

வாகன விபத்துக்களை கட்டுப்படுத்துவதற்கு முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளால் விபத்துகளைக் கட்டுப்படுத்துவதற்கு முடியவில்லை என்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும். போக்குவரத்துப் பொலிசாரின் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட வேண்டும் என்பதே மக்களின் குரலாக இருக்கின்றது.

நாட்டிலுள்ள சந்திகளில் உள்ள வீதிச்சமிக்ஞை விளக்குகளின் அருகில் நின்றவாறு, வாகனசாரதிகள் தவறிழைக்கின்றனரா என்று கண்டுபிடிப்பது மாத்திரமே போக்குவரத்துப் பொலிஸாரின் கடமை அல்ல. அதற்கும் அப்பால் அவர்கள் அதிக விடயங்கள் மீது கவனம் செலுத்த வேண்டியிருக்கின்றது.

போதைப்பொருட்களைப் பயன்படுத்திய நிலையில் வாகனங்களைச் செலுத்தும் சாரதிகளை அடையாளம் காண்பதற்கான பரிசோதனைகள் தீவிரப்படுத்தப்பட வேண்டும். அத்துடன் வீதிப் போக்குவரத்து விதிமுறைகள் சரிவர கடைப்பிடிக்கப்பட்டு வாகன விபத்துக்கள் கட்டுப்படுத்தப்படுவது உறுதிப்படுத்தப்பட வேண்டும். வாகன சாரதிகள் மாத்திரமன்றி, வாகனமோட்டிகளும் வீதிப்போக்குவரத்து சட்டதிட்டங்களை மதித்துச் செயற்படுவது உறுதிப்படுத்தப்பட வேண்டும். அப்போதுதான் மக்கள் வீதிகளில் நிம்மதியாக நடமாடுவதற்கு வழியேற்படும்.

CCTV கண்காணிப்பு கமரா தொழில்நுட்பமானது வாகன விபத்துகளைக் குறைப்பதற்கு சிறந்ததொரு தீர்வாக அமையுமென்று நாட்டு மக்கள் நீண்ட காலமாகவே கோரி வருகின்றனர். உலகின் பல நாடுகளில் இந்தத் தொழில்நுட்பம் நீண்ட காலமாகவே நடைமுறையில் இருந்து வருகின்றது. அதன் காரணமாக அந்நாடுகளில் வீதிவிபத்துகள் மிகவும் குறைவாகவே இடம்பெறுகின்றன. அதுமாத்திரமன்றி, வாகனசாரதிகளும் மிகவும் அவதானமாகவே வாகனத்தைச் செலுத்துகின்றனர்.

அந்நாடுகளில் வீதிகளின் பிரதான சந்திகள் மற்றும் கடவைகளில் சிசிரிவி கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. வீதிச்சமிக்ஞை விளக்குகளை அலட்சியம் செய்தவாறு எந்தவொரு வாகனமும் செல்லும் போது, அச்சாரதி இழைக்கின்ற குற்றம் உடனடியாகவே CCTV கமராவினால் பதிவு செய்யப்படுகின்றது. அக்குற்றத்துக்கான அபராதமும் உடனடியாகவே குறித்த சாரதிக்கு வந்து சேருகின்றது. அவர் குற்றத்திலிருந்து ஒருபோதுமே தப்பிக் கொள்ள முடியாது.

அதன் காரணமாக வீதிகளில் வாகனம் செலுத்துகின்ற போது, சாரதிகள் மிகவும் அவதானமாகவே உள்ளனர். வீதிவிபத்துகளும் குறைவடைகின்றன. அபராதம் செலுத்த வேண்டி வருமென்ற எச்சரிக்கையுணர்வு அவர்களிடம் எந்நேரமும் காணப்படுகின்றது.

இவ்வாறான CCTV கண்காணிப்பு கமரா தொழில்நுட்பம் இலங்கையிலும் அறிமுகப்படுத்தப்படுவது உண்மையிலேயே வரவேற்கத்தக்கதாகும். சந்திகளில் ஒன்றையொன்று முந்திக் கொண்டு ஓடுகின்ற எந்தவொரு வாகனமும் குற்றத்திலிருந்து தப்பிக்கொள்ள முடியாது. வீதிச்சமிக்ஞை விளக்குகளுக்கு முன்னுரிமையளித்து அவதானத்துடன் வாகனம் செலுத்துகின்ற சாரதிகளுக்கும் இதன் மூலம் பாதுகாப்புக் கிடைக்கின்றது. இந்தத் தொழில்நுட்பமானது கொழும்பில் மாத்திரமன்றி நாட்டின் பல இடங்களிலும் அறிமுகப்படுத்தப்பட வேண்டுமென்பதே மக்களின் கோரிக்கையாகும்.

editor.tkn@lakehouse.lk

# உலகெங்கும் எண்ணிக்கையற்ற ரசிகர்களின் செவிக்கு இனிமை ஊட்டியவர் பவதாரிணி

## இசைஞானி இளையராஜாவின் புதல்வி மறைவினால் திரையுலகத்தினரும், ரசிகர்களும் பெருந்துயர்!



இசையமைப்பாளர் இளையராஜாவின் மகள் பவதாரிணி உடல் நலக்குறைவு காரணமாக நேற்றுமுன்தினம் காலமானார். அவர் பித்தப்பை புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்தார். பவதாரிணி அனுமதிக்கப்பட்டிருந்த கொழும்பு தனியார் மருத்துவமனைக்கு வந்தார் இளையராஜா.

இலங்கையில் அவர் பித்தப்பை புற்றுநோய்க்காக சிகிச்சை பெற்று வந்தார். அது கடைசி நிலையிலேயே கண்டுபிடிக்கப்பட்டதாக திரைத்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

வியாழக்கிழமை மாலை 5:20 மணியளவில் பவதாரிணி உயிரிழந்ததாகவும் அவரது உடலை சென்னை கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் நேற்றைய தகவல்கள் தெரிவித்தன.

இளையராஜாவின் இசையில் பாரதி திரைப்படத்தில் 'மயில் போலப் பொண்ணு ஒன்னு' என்ற இவர் பாடிய பாடல் மூலம் இவருக்குச் சிறந்த பின்னணிப் பாடகருக்கான தேசிய விருது கிடைத்தது. ராமன் அப்துல்லா, தாமிரபரணி, புதிய கீதை உள்ளிட்ட படங்களில் அவர் பாடியுள்ளார்.

இலங்கைக்கு ஒரு வாரம் முன்பு, பவதாரிணி உள்ளிட்ட சிலர் வருகை தந்துள்ளனர்.

கொழும்பில் வாடகைக்கு வீடொன்றை எடுத்து, அங்கு தங்கியிருந்த நிலையில், பவதாரணிக்கு ஆயுர்வேத சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இசை நிகழ்ச்சிக்காக இளையராஜா கடந்த 24 ஆம் திகதி கொழும்பை வந்தடைந்தார். இதனிடையே, பவதாரணிக்கு வியாழக்கிழமை திடீர் சுகவீனம் ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து, பவதாரணி கொழும்பு தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். கவலைக்கிடமான நிலையில் இருந்த அவர் வியாழக்கிழமை மாலை உயிரிழந்தார்.

புற்றுநோயுடன் திடீர் மாரடைப்பு ஏற்பட்டமையே உயிரிழப்புக்கான காரணம் என மருத்துவமனை தகவல்கள் தெரிவிக்கின்றன.



பவதாரிணி பல முக்கியமான பாடல்களைப் பாடியுள்ளார். பிரபுதேவா நடிப்பில் 1995ஆம் ஆண்டு வெளியான ராசய்யா படத்தில் வரும் 'மஸ்தானா மஸ்தானா' பாடல் மூலம் அவர் பாடகியாக அறிமுகமானார்.

எம்.குமரன் படத்தில் வரும் 'அய்யோ அய்யோ' பாடல், தாமிரபரணி படத்தின் 'தாளியே தேவையில்ல' பாடல் போன்ற ஹிட் பாடல்களைப் பாடியுள்ளார் பவதாரிணி.

அதேபோல், காதலுக்கு மரியாதை படத்தில் வரும் 'என்னைத் தாலாட்ட வருவாளா', ஆயுத எழுத்து படத்தின் 'யாக்கைத் திரி', காக்க காக்க படத்தின் 'என்னைக் கொஞ்சம் மாற்றி' போன்ற தமிழ் சினிமாவின் குறிப்பிடத்தக்க பாடல்களை அவர் பாடியுள்ளார். இளையராஜா மட்டுமின்றி கார்த்திக் ராஜா, யுவன் சங்கர் ராஜா ஆகியோரது இசையிலும் பல பாடல்களைப் பாடியுள்ளார்.

கடந்த 2002ஆம் ஆண்டு ரேவதி இயக்கத்தில் வெளியான 'மித்ர் மை பிரெண்ட்' என்ற படத்தின் மூலம் இசையமைப்பாளராகவும் அறிமுகமானார். அதைத் தொடர்ந்து இந்தியில் ரேவதி இயக்கத்தில் அபிஷேக் பச்சன், ஷில்பா ஷெட்டி, சல்மான் கான் ஆகியோர் நடிப்பில் வெளியான ஃபிர் மிலெங்கே என்ற படத்திலும் இசையமைத்தார்.

1991ஆம் ஆண்டு இளையராஜா உருவாக்கிய ராஜாவின் ரமணமாலை என்ற இசைத் தொகுப்பில் 'ஆராவமுதே' என்ற பாடலை பவதாரிணி பாடினார்.

அலெக்சாண்டர், கருவேலம் பூக்கள், காதலுக்கு மரியாதை, டைம், பாரதி, அழகி, பிரெண்ட்ஸ், ஒரு நாள் ஒரு கனவு, அழகாய் இருக்கிறாய் பயமாய் இருக்கிறது, தாமிரபரணி, நாளைய பொழுதும் உன்னோடு, உளியின் ஓசை, தனம், கோவா, மங்காத்தா, அனேகன் ஆகிய தமிழ்ப் படங்களில் இடம்பெற்ற பாடல்களை அவர் பாடியுள்ளார்.

தமிழில் அமிர்தம், இலக்கணம், மாயநதி ஆகிய படங்களுக்கு இசையமைத்துள்ளார். பவதாரிணி, தமிழ், இந்தி, தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளில் பல்வேறு படங்களுக்கு இசையமைத்துள்ளார்.

அவருக்கு இரங்கல் தெரிவித்து பின்னணிப் பாடகி சின்மயி தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். "எனக்குத் தெரிந்த நல்ல மனிதர்களில் பவதாரிணி இளையராஜாவும் ஒருவர். பத்திரமாகப் போய் வா, அன்புப் பெண்ணே!" என்று பதிவிட்டுள்ளார்.

மேலும், "இளையராஜா, கார்த்திக் ராஜா, யுவன் சங்கர் ராஜா ஆகியோர் தைரியத்துடன் இருக்க நான் வேண்டிக் கொள்கிறேன். இது மிகவும் மனதை உடைக்கும் செய்தி" என்றும் குறிப்பிட்டுள்ளார்.

"பதவாரிணியின் குரலில் ஒரு குழந்தைத்தன்மை இருக்கும். அவரது குரல் அனைவருக்கும் மிகவும் பிடித்தமான குரல். இவ்வளவு இளம் வயதில் இப்படிப் பிரிந்து செல்வார் என்று எதிர்பார்க்கவில்லை. அவரது மறைவை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அவருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்" என்று தெரிவித்தார் இசையமைப்பாளர் தினா.

பாடகி பவதாரிணியின் குரல் மிகவும் மென்மையானது, தனித்துவமானது என்று இசையமைப்பாளர் ஸ்ரீகாந்த் தேவா தனது இரங்கலில் தெரிவித்துள்ளார்.

பவதாரிணியின் மறைவுச் செய்தியால் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்துள்ளதாக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது இரங்கலில் தெரிவித்துள்ளார்.

"இசைமேதைகள் நிறைந்த குடும்பத்தில் பிறந்த பவதாரிணி, தேனினும் இனிய தனது குரல்வளத்தால் இளம் வயதிலேயே ரசிகர்களின் நெஞ்சில் தனியிடம் பிடித்தவர். கேட்டதும் அடையாளம் கண்டுகொண்டு பரவசமடையச் செய்யும் மிகவும் தனித்துவமான குரல் அவருடையது," என்று அவர் புகழாரம் சூட்டியுள்ளார்.

மேலும், "இன்னும் பல்லாண்டுகள் வாழ்ந்து இசையுலகில் எத்தனையோ சாதனைகளைச் செய்திருக்க வேண்டிய பவதாரிணியின் திடீர் மறைவு இசையுலகில் ஈடுசெய்தற்கரிய இழப்பு. அவர் விட்டுச் செல்லும் இடம் அப்படியே இருக்கும்.

தனது பாசமகளை இழந்து துடிக்கும் இசைஞானிக்கும் பவதாரிணியின் சகோதரர்கள் யுவன் சங்கர் ராஜா, கார்த்திக் ராஜா உள்ளிட்ட குடும்பத்தினருக்கும் திரையுலகினருக்கும் ரசிகர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்," என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## இந்திய குடியரசு தினக் கொண்டாட்டம்;

# பாரம்பரிய வாகனத்தில் வந்திறங்கிய குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு



டெல்லியில் நேற்று நடைபெற்ற குடியரசு தின கொண்டாட்டத்தில் சாரட் வண்டில் வந்து பங்கேற்றார் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு. கடந்த 40 ஆண்டுகளில் இந்திய குடியரசு தலைவர் ஒருவர், குடியரசு தின நிகழ்ச்சிக்கு சாரட் வண்டியில் வந்து பங்கேற்பது இதுவே முதல் முறையாகும்.

இந்தியாவின் 75வது குடியரசு தினம் நாடு முழுவதும் நேற்று வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது. குடியரசு தினவிழாவை முன்னிட்டு டெல்லி செங்கோட்டையில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. செங்கோட்டை பகுதியில் விமானங்கள் பறக்க தடை விதிக்கப்பட்டிருந்தது. முக்கிய இடங்களில் துப்பாக்கி ஏந்திய பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. சுமார் 70,000 பாதுகாப்பு படையினர் பாதுகாப்புப்பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

இந்த ஆண்டு குடியரசு தின கொண்டாட்டத்தில் நாட்டின் பெண்களின் சக்தி மற்றும் ஜன நாயக கோட்பாடுகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. சுமார் 90 நிமிடங்கள் நடை பெறும் குடியரசு தின அணிவகுப்பில் முதல் முறையாக முப்படைகளில் உள்ள பெண் படைப் பிரிவினர் பங்கேற்றிருக்கின்றனர். இராணுவத் தளவாடப் பிரிவில் முதன் முறையாக பணியமர்த்தப்பட்ட 10 பெண் அதிகாரிகளில் தீப்தி ராணா, பிரியங்கா செவ்டா ஆகியோர் பினாகா ராக்கெட் அமைப்பு மற்றும் குண்டுகளைக் கண்டறியும் ரேடார் அமைப்புடன் பங்கேற்றனர்.

வழக்கமாக இடம்பெறும் இராணுவப் பிரிவு பேண்ட் வாத்தியங்களுக்குப் பதிலாக 100க்கும் மேற்பட்ட பெண் இசைக் கலைஞர்கள் நாதஸ்வரம், நகாடா போன்ற இந்திய இசை வாத்தியங்களை இசைத்தனர். இந்திய விமானப் படையைச் சேர்ந்த 15 பெண் விமானிகள் விமான சாகசங்களை நிகழ்த்தினர். அதேபோல 40 ஆண்டுகளுக்குப் பிறகு குடியரசு தின கொண்டாட்டத்தில் பங்கேற்பதற்காக பாரம்பரிய சாரட் வண்டியில் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு வந்தார். சாரட் வண்டியில், சிறப்பு விருந்தினர் பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மேக்ரானுடன் வந்த குடியரசுத் தலைவர் தேசிய கொடியை ஏற்றி வைத்து முப்படைகளின் மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

# இராமர் சிலையை வடிப்பதற்காக ஆறு மாதகாலமாக மனைவி, பிள்ளைகளை பிரிந்திருந்த அருண் யோகிராஜ்

அயோத்தி இராமர் கோயில் கருவறையில் கர்நாடக சிற்பி அருண் யோகிராஜ் செதுக்கிய 5 வயது பால இராமர் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. இந்தச் சிலையை வடிப்பதற்காக கடந்த 6 மாதமாக அருண் யோகிராஜ் தனது மனைவி, குழந்தைகளை பிரிந்து இருந்துள்ளார்.

உலகெங்கும் பிரபலமாகியுள்ள இந்தச் சிலையை வடித்தவர் கர்நாடகா மாநிலம் மைசூரை சேர்ந்த சிற்பி அருண் யோகிராஜ் ஆவார். இராமர் சிலையை சுற்றிய அலங்காரத்தில் விஷ்ணுவின் 10 அவதார வடிவங்கள் இடம்பெற்றுள்ளன. சங்கு, சக்கரம், தாமரை, கதை, பிரணவம், சுவத்திகம் போன்ற சிற்பங்களும், நவகிரங்களான சூரியன், புதன், சுக்கிரன், குரு, ராகு கேது, வெள்ளி, சந்திரன், செவ்வாய், சனி உள்ளிட்டவற்றின் சிற்பங்களும் உள்ளன. மொத்தத்தில் இந்தச் சிலை பக்தர்களை ஈர்க்கும் வகையில் உள்ளது. இந்நிலையில் கும்பாபிஷேகத்தையொட்டி சிற்பி அருண் யோகிராஜ் அவரது மனைவி விஜிதாவை 6 மாதம் பிரிந்து தீவிரமாக பணியாற்றியது தெரியவந்துள்ளது.

இதுபற்றி அவரது மனைவி விஜிதாவே கூறியுள்ளார். அதாவது கும்பாபிஷேகம் முடிந்த பிறகு அருண் யோகிராஜ் விமானம் மூலம் அயோத்தியில் இருந்து பெங்களூர் வந்திறங்கினார். அப்போது அவரை வரவேற்க மனைவி விஜிதா வந்திருந்தார். அருண் யோகிராஜ் மட்டுமின்றி மேலும் 2 பேரும் இராமர் சிலையை வடித்தனர். இதில் அருண் யோகிராஜ் சிலைதான் ஸ்ரீராம ஜென்மபூமி தீர்த்த சேத்ரா அறக்கட்டளை சார்பில் தெரிவு செய்யப்பட்டது. இந்தச் சிலை வடிப்பு பணியில் அவர் கடந்த 6 மாதங்களாக மிகவும் கவனமாக வேலை செய்து வந்தார். மனைவியை பிரிந்து அயோத்தியில் தங்கி சிலை செதுக்கினார்.

# நீர்கொழும்பு கடற்கரையை தூய்மைப்படுத்தும் பணி





எக்ஸ்டமினேற்றர் பீ.எல்.சி.நிறுவனம் நீர்கொழும்பு கடற்கரையில் கடற்கரையை சுத்தப்படுத்தும் வேலைத்திட்டத்தை முன்னெடுத்தது.

நமது இயற்கை சூழலைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தைப் புரிந்துகொண்டு, நமது சமூகத்தில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்த உறுதிபூண்டுள்ள எக்ஸ்டமினேற்றர் பீ.எல்.சி.நிறுவனம் குப்பைகளை சேகரித்து அப்புறப்படுத்த அயராது உழைத்து, இந்த பிரபலமான கடற்கரையின் அழகை அனைவரும் ரசிக்கும் வகையில் பராமரிக்க உதவியுள்ளது.

நமது வீடு, வாசல் போன்றே பொது இடங்களும் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் காணப்படல் வேண்டும்.பூனைக்கு மணி யார் கட்டுவது போலன்றி கூட்டு நடவடிக்கையின் பயனாக நமது கடற்கரைகளைப் பாதுகாப்பதற்கு நாங்கள் எடுத்துள்ள முயற்சிகளில் எங்களுடன் சேர மற்றவர்களை ஊக்குவிக்கிறோம்.

நம் பெருங்கடல்கள் மற்றும் கடற்கரையோரங்களைச் சுத்தமாகவும், ஆரோக்கியமாகவும் வைத்திருப்பதில் நாம் அனைவரும் இணைந்து உண்மையான மாற்றத்தை தலைமுறை தலைமுறையாக உருவாக்க முடியும் என்று அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.


எம்.ஐ.எம்.அஸ்ஹர்...


# அவுஸ்திரேலியத் தமிழ் இலக்கிய கலைச்சங்கத்தின் ரூ. 50,000 பரிசு பெறும் இலங்கை எழுத்தாளர்கள்




அவுஸ்திரேலியத் தமிழ் இலக்கிய கலைச் சங்கம், இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களை ஊக்குவிக்குமுகமாக நடத்திவரும் வருடாந்த இலக்கியப்போட்டியில் இம்முறை, 2022 ஆம் ஆண்டில் வெளியான நூல்களிலிருந்து நடுவர்களின் மதிப்பீட்டின் மூலம் சிறந்தனவற்றை பரிசுக்குத் தெரிவு செய்துள்ளது.

சிறுகதை, நாவல், கட்டுரை, கவிதை முதலான நான்கு துறைகளில் 2022 ஆம் ஆண்டு வெளியான இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களின் நூல்கள் இந்தத் தெரிவுக்காக ஊடகங்களின் வாயிலாக கோரப்பட்டிருந்தன.





குறிப்பிட்ட போட்டி தொடர்பான அறிவித்தலை வெளியிட்ட இலங்கை மற்றும் புகலிட தேசத்து ஊடகங்களுக்கும் இந்தப் போட்டிக்கு சங்கத்தின் போட்டி விதிமுறையின் பிரகாரம் நூல்களை தபாலில் அனுப்பி வைத்த எழுத்தாளர்களுக்கும் சங்கத்தினால் நன்றி தெரிவிக்கப்பட்டுள்ளது.

போட்டி விதிமுறைகளுக்கு ஏற்றவாறு இம்முறை, கட்டுரை இலக்கியத்துறையில் நூல்கள் எவையும் சங்கத்திற்கு கிடைக்கப்பெறவில்லை.

சிறுகதைத்துறையில் நான்கு நூல்களும், நாவல் இலக்கியத் துறையில் மூன்று நூல்களும், கவிதை இலக்கியத்துறையில் நான்கு நூல்களும் இம்முறை இந்தப் போட்டிக்காக கிடைக்கப்பெற்றன. இவற்றுள் சிறந்த நூல்களாக ஒரு சிறுகதைத் தொகுப்பும், ஒரு நாவலும், ஒரு கவிதைத் தொகுப்பும் தெரிவாகியுள்ளன.

இவற்றுக்கு இலங்கை நாணயத்தில் தலா ஐம்பதாயிரம் ரூபா வழங்கப்படுகிறது.

வல்லமை தாராயோ – (சிறுகதைத் தொகுப்பு ) எழுதியவர் : மாத்தளை வடிவேலன்.

வேராகிப்போன மனிதர்கள் – (நாவல்) எழுதியவர்: ஏ.எஸ். உபைத்துல்லா.

கடிகாரப் பறவைகள் (கவிதை) எழுதியவர்:

திருக்கோவில் கார்த்திகேசு.

பரிசுகளை வழங்குபவர்கள்:

திருமதி துளசி முருகையா: அவுஸ்திரேலியா சமூகப்பணியாளர் (அமரர்) திருமதி மகாதேவி ஜெயமணி முருகையா நினைவுப்பரிசு.

சட்டத்தரணி (திருமதி) மரியம் நளிமுடீன்: முன்னாள் இலங்கை அமைச்சர் ஏ. ஆர். மன்சூர் நினைவுப்பரிசு.

திருமதி சிவமலர் சபேசன்: அவுஸ்திரேலியா மெல்பன் 3 C R வானொலி தமிழ் குரல் ஊடகவியலாளர் (அமரர்) சண்முகம் சபேசன் நினைவுப்பரிசு .

போட்டிக்கு நூல்களை அனுப்பி வைத்த எழுத்தாளர்களுக்கும், நூல்களைப்படித்து , மதிப்பீடு செய்த நடுவர்களுக்கும், செய்திகளை வெளியிட்ட ஊடகங்களுக்கும் அவுஸ்திரேலியத் தமிழ் இலக்கிய கலைச்சங்கம் நன்றியைத் தெரிவித்துள்ளது.

பரிசுக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ள எழுத்தாளர்களுக்கு எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடுப்பகுதிக்கு முன்னர் பரிசுத் தொகையும் சான்றிதழ்களும் அனுப்பிவைக்கப்படும்.

# உலக தமிழ்ச் சங்கத்தின் இலக்கிய விருது பெற்ற பேராசிரியர் பாலசுந்தரத்திற்கு கனடாவில் பாராட்டு





உலக தமிழ்ச் சங்க இலக்கிய விருது பெற்ற, காரைதீவைச் சேர்ந்தவரும் கனடாவில் வசிப்பவருமான பேராசிரியர் பாலசுந்தரத்திற்கு கனடாவில் பாராட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

இந்தியா தமிழகத்தில் இடம்பெற்ற அயலகத் திருவிழாவில் பேராசிரியர் இளையதம்பி பாலசுந்தரத்திற்கு தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் எழுத்துலகில் ஆற்றிய தமிழியலுக்கான விருதினையும் பாராட்டினையும் வழங்கி மதிப்பளித்ததனை வரவேற்கும் நோக்குடன் கனடா அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் பெரும் பாராட்டு விழா நடைபெற்றது.

பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள் ,ஆசிரியர்கள், எழுத்தாளர்கள் ஆகியோர் ஒருங்கிணைந்து கனடா அண்ணாமலைப் பல்கலைக்கழக மண்டபத்தில் பேராசிரியர் இ.பாலசுந்தரத்திற்கான வரவேற்பும் மதிப்பளிப்பும் வழங்கினர்.



அதேவேளை, உலகத் தமிழ்ச் சங்க இலக்கிய விருது இம்முறை கனடாவில் வாழும் காரைதீவைச் சேர்ந்த பேராசிரியர் இளையதம்பி பாலசுந்தரத்திற்கு கிடைத்திருக்கின்றது.

இந்த விருதை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் மதுரையில் இடம்பெற்ற நிகழ்வில் வழங்கி வைத்தார்.

பேராசிரியர் பாலசுந்தரத்துக்கு இந்த விருதோடு இந்திய மதிப்பில் 2 இலட்சம் ரூபாய் பொற்கிழியும் பொன்னாடையும் வழங்கப்பட்டன.

17 தகுதியான நூல்களையும் 64 ஆய்வு கட்டுரைகளையும் வெளியிட்டு இருந்தார் காரைதீவைச் சேர்ந்த இளையதம்பி செல்லம்மா தம்பதியினரின் புதல்வரான இவர்.

தமிழ் இலக்கியத்தில் முதுதத்துவமாணி பட்டம் பெற்று யாழ்ப்பாணம், கொழும்பு, லண்டன் பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளராக இருந்து பேராசிரியர் ஆனவர் இவர்.

சாஹித்திய மண்டல விருது இலக்கிய விருது வாழ்நாள் சாதனையாளர் விருது உட்பட பல விருதுகளை பெற்றவர்.

இவரது இலக்கியப் பணியை சிறப்பித்து மதுரை உலக தமிழ்ச் சங்கத்தினர் இந்த விருதை வழங்கி வைத்தனர்.

பேராசிரியர் பாலசுந்தரம் தமிழ்த் துறையில் பேராசிரியராக கனடா அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் பணியாற்றினார். தற்சமயம் இணைப்பாளராக பணியாற்றி வருகிறார்.

**வி.ரி.சகாதேவராஜா...**
(காரைதீவு குறூப் நிருபர்)

# சி.வி.வேலுப்பிள்ளையின் 'எல்லைப்புறம்': சில குறிப்புகள்



ஆங்கிலத்தில் எழுதிக்கொண்டிருந்த சி.வி. வேலுப்பிள்ளையின்(1914 – 1984) தமிழ் எழுத்தின் வளத்திற்கு 'தினகரன்' பத்திரிகை நீர் வார்த்தது. க.கைலாசபதி அவர்கள் தினகரன் பத்திரிகையில் ஆசிரியராக இருந்த 1959 – 1959 காலப்பகுதியில் 'மலைநாட்டுத் தமிழ்மக்கள் தலைவர்கள்' என்ற தலைப்பிலும், 'மலைநாட்டுத் தமிழ் மக்களின் உரிமைப்போர்த் தளபதிகள்' என்ற தலைப்பிலும் சி.வி. எழுதிய அரசியல் கட்டுரைகள் ஈழத் தமிழ் இலக்கியத்தின் அரசியல் எழுத்தில் தனி முக்கியத்துவத்திற்குரியவை.

மலையகத்தின் நாவல் இலக்கியத்தில் சி.வி.யின் இடம் தனிச் சிறப்பிற்கும் தனி அத்தியாயத்திற்கும் உரியது. 1960 இல் தினகரன் பத்திரிகையில் தொடர்கதையாக வெளியான 'வாழ்வற்ற வாழ்வு' என்ற நாவல் சி.வி. ஆங்கிலத்தில் எழுதிய நாவலின் தமிழ் மொழி பெயர்ப்பாகும். இதனை பொ.கிருஷ்ணசாமி மொழி பெயர்த்திருக்கிறார். ஆங்கில மூலநூல் கைப்பிரதியாகவே இருந்திருக்கவேண்டும்.

சாரல்நாடன் அவர்கள் 'வாழ்வற்ற வாழ்வு' என்ற தமிழ் நாவலைத் தனது சாரல் வெளியீட்டகத்தின் வாயிலாக 2001 இல் வெளியிட்டார். சாரல்நாடன் மலையக இலக்கியத்திற்கு வழங்கிய பெருங்கொடையாகவே அதனை நோக்க வேண்டும். அல்லாது போனால் கிட்டத்தட்ட அந்த நாவலை நாம் இழந்து போகவிருந்தோம் என்றுதான் கூறவேண்டும்.

சி.வி.யின் 'எல்லைப்புறம்' என்ற நாவலும் தினகரன் பத்திரிகையில் 1962 இல் தொடராக வெளிவந்தது. சி.வி.ஆங்கிலத்தில் எழுதியிருந்த நாவலை பொ.கிருஷ்ணசாமி தமிழில் மொழிபெயர்த்திருந்தார். இந்த ஆங்கில மூலப்பிரதியும் அச்சில் வெளிவந்ததாகத் தெரியவில்லை. இதே ஆண்டில் சி.வி.எழுதிய 'வீடற்றவன்' என்ற நாவல் பத்திரிகையில் தொடராக வெளியானது.

தினகரனில் 1962 இல் தொடர்கதையாக வெளியான 'பார்வதி' என்ற நாவலை சி.வி. தமிழிலேயே எழுதியிருந்தார். அந்த நாவல் இன்னும் நூல் வடிவம் பெறவில்லை.

இவற்றைத் தவிர , 1946 ஆம் ஆண்டில் சி.வி. எழுதிய 'காதல் சித்திரம்' என்ற நவீனத்தை கொழும்பு கலைப்பிரசுராலயம் வெளியிட்டது என்ற தகவலை சாரல்நாடன் தருகிறார்.அந்த நூல் வெளியான தகவலை சாரல்நாடன் இலங்கைத் தேசிய சுவடித் திணைக்களத்திலிருந்து, 1949 ஆம் ஆண்டில் இலங்கையில் வெளியான நூல்களின் அட்டவணையிலிருந்து பெற்றிருக்கவேண்டும். 'வீடற்றவன்' என்ற நாவலே தான் முதன்முதல் தமிழில் எழுதிய நாவல் என்று சி.வி.கூறுவதிலிருந்து, 'காதல் சித்திரம்' என்ற நவீனம் அவர் ஆங்கிலத்தில் எழுதித் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டதாக இருக்கவேண்டும் என்று அனுமானிக்க முடிகிறது.

கலைஒளி முத்தையாபிள்ளை நினைவுக் குழுவின் வெளியீடாக விரைவில் பிரசுரம் பெறும் 'எல்லைப் புறம்' என்ற நாவலுக்கு தமிழகத்தின் பிரபல நாவலாசிரியர் அகிலன் அவர்களிடமிருந்து சி.வி. முன்னுரை பெற்றிருக்கிறார்.

'எல்லைப்புறம்' என்ற விவகாரம் அரசியலிலும் சமூக வாழ்வியலிலும் இனங்களுக்கிடையிலும் பெரும் பிரச்சினைகளை உருவாக்கியுள்ளது. இரண்டு தேச மக்கள் அல்லது இரண்டு இனங்கள் அயலயலில், எல்லையில் வாழும்போது, எல்லைப்புறத்திற்கேயுரிய மோதல்கள், இணக்கங்கள், வரலாற்று உணர்வுகள், தொடர்புகள், தொடர்பின்மைகள், முரண்பாடுகள், பகைமைகள் உருவாகின்றன.

இலங்கையின் மத்திய மலைநாட்டில் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களை உள்ளடக்கிய பெருந்தோட்டங்களும் சிங்களவிவசாயிகளைக் கொண்ட கிராமப்புறங்களும் எல்லைப்புறங்களில் அமைந்திருந்தன.

'இவர்கள் கிராமம், நகரம் ஆகியவற்றிற்கு வெகு தூரத்தில் லயங்களில் ஒதுக்கப்பட்டு வாழ்கிறார்கள். இலையின் கருமை நிறைந்த சூழ்நிலையிலே, கவ்வாத்து, கொழுந்தெடுப்பு ஆகிய அன்றாடச் செயல்களையே வாழ்வாகக் கொண்ட இவர்கள் தோட்டத்திற்கு வெளியேயுள்ள உலகத்துடன் தொடர்பை இழந்து விடுகிறார்கள். கிராமத்திலும் நகரத்திலும் வாழும் இவர்களது அயலார்களைக்கூட அவர்கள் நெருங்கமுடியாதென வர்ணிக்கிறார் ஆசிரியர்' என்று சி.வி. எழுதிய விமர்சனக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எல்லைப்புறங்களில் வாழும் இரண்டு சமூகங்களுக்குமிடையே ஊடாட்டமின்மையை சி.வி. தனது படைப்புகளில் வலியுறுத்துகிறார்.

'தோட்டத்தொழிலாளர்களை ஒதுக்கித் தள்ளிவிடக்கூடாது. அவர்களுக்கும் இந்த உரிமையை அரசு வழங்க வேண்டும்' என்று அட்டன் டன்பார் மைதானத்தில் 18.08.1994 இல் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் சி.வி. உரையாற்றுகையில் முன்மொழிகிறார்.

காணி அமைச்சர் ஹெக்டர் கொபேகடுவ, தோட்டக்கைத்தொழில்அமைச்சர்டொக்டர்கொல்வின் ஆர்.டி.சில்வா ஆகிய அமைச்சர்கள் கலந்துகொண்ட பொதுக்கூட்டத்தில் தொழிலாளர் தேசியச் சங்கத்தின் பொறுப்பாளராக சி.வி.அவர்கள் முன்வைத்த கோரிக்கை இது. தோட்டங்களுக்கும் சிங்களக்கிராமங்களுக்கும் இடையேயான எல்லைப்புறங்களில் வாழும் இரு சமூகத்தவரிடையே நிலவும் உறவில் பகைமையே மேலோங்கி நின்றிருக்கிறது.

மத்திய மலைநாட்டின் கோப்பி யுகத்திலிருந்து இந்தப் பகைமையின் ஊற்றைக் காணலாம். 1848 இல் மாத்தளை மாவட்டத்தில் கோப்பித் தோட்டங்களின்மீது கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தியபோது, தோட்டத் துரைமாரின் பங்களாக்களுக்குக் காவல் நின்று, கிளர்ச்சியாளர்களுக்கு எதிராகத் தோட்டத் தொழிலாளர்கள் போராடியுள்ளனர்.

கோப்பிக் காலத்தின்போது, கோப்பித் தோட்டங்களில் கடுமையாக உழைத்துச் சம்பாதித்த கொஞ்சப்பணத்தை எடுத்துக்கொண்டு, இந்தியாவிற்குத் திரும்பிச் செல்லும் வழியில், அவர்கள் சிங்கள வழிப்பறிக் கொள்ளையர்களால் தாக்கப்பட்டு, அவர்களின் பணம் கொள்ளையிடப்பட்டிருக்கிறது.அவிசாவளை இரத்தினபுரிப் பாதை என்பது ஆபத்து நிறைந்த பாதையாக இருந்திருக்கிறது.

அப்புத்தளை, றக்வான பகுதியைச் சேர்ந்த தொழிலாளர்கள் இந்தியாவிற்குத் திரும்பிச் செல்லும் வழியில் அடிக்கடி தாக்குதலுக்குள்ளாக்கப் பட்டிருக்கிறார்கள்; கொல்லப்பட்டுமிருக்கிறார்கள்.

1905 ஆம் ஆண்டளவில் கொக்கோ தோட்டம் ஒன்றில் வேலைபார்த்த தமிழ்த் தொழிலாளி, எல்லைப்புறக் கிராமத்திலிருந்த சிங்கள 'ஆராச்சி' ஒருவரால் தாக்கப்பட்டுத் தான் காதில் அணிந்திருந்த தோடும் திருடப்பட்டதாக தோட்டத் துரையிடம் முறைப்பாடு செய்திருக்கிறார். ஆனால், அந்த ஆராச்சியோ, சம்பந்தப்பட்ட கூலி குடித்துவிட்டு, மற்றொரு சிங்களக் கிராமவாசியுடன் ஒரு மான்குட்டி பற்றிச் சச்சரவில் ஈடுபட்டதாகவும், அந்த நபர்தான் இவரது தோட்டினை எடுத்துக்கொண்டுவிட்டதாகவும் பதில் கூறியிருக்கிறார்.

தோட்டத் தொழிலாளர்கள் கள் அருந்துவதற்காக தோட்டங்களின் எல்லையில் அமைந்திருக்கும் சிங்களக் கள்ளுக் கொட்டகைகளுக்குப் போய் வருவது வாடிக்கை. தெளிவத்தை ஜோசப்பின் சிறுகதைகளில் இப்படி நாட்டுக்குப் போய்க் குடித்துவிட்டுவரும் தமிழ்க் கதாபாத்திரங்களைக் காணமுடியும். கோப்பி யுகத்தில், கோப்பித் தோட்டங்களிலிருந்து நாட்டுச் சிங்களவர்கள் கோப்பியைத் திருடிச் செல்வது பற்றிய சம்பவங்கள் நிறைய நடந்துள்ளன.

ஊவா மாகாணத்தில் 1934இல் நடைபெற்ற நிகழ்ச்சி தோட்டங்களுக்கும் கிராமப்பகுதிக்கும் இடையில் நடைபெற்ற மோதலின் குரூரத்திற்கு ஒரு எடுத்துக்காட்டாகும். தோட்டத் தொழிலாளர்கள் நாடக மேடையேற்றத்திற்கு பிரதான பாதையை ஒட்டி மேடையை அமைத்திருக்கிறார்கள். பார்வையாளர்கள் பாதையில் நிறையவே குழும ஆரம்பித்துவிட்டார்கள்.கூட்டத்தின் மத்தியில் நின்று கொண்டிருந்த ஒரு சிங்களப் பையனைத் தரையில் உட்காருமாறு அல்லது கூட்டத்திலிருந்து வெளியேறுமாறு தமிழ் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் கேட்டிருக்கிறார்கள். ஆனால், அப்பையன் பொதுவான பாதை ஒன்றில் நின்று கொண்டிருப்பதற்குத் தனக்கு உரிமை உண்டு என்று கூறி, மேடை அமைப்பாளர்கள் கேட்பதற்கு அவன் சம்மதிக்கவில்லை. வாக்குவாதம் முற்றிய நிலையில் அந்தச் சிங்களப்பையன் திடீரெனக் கத்தியை உருவி எடுத்து, ஒரு தமிழ்த் தொழிலாளியை அந்த இடத்திலேயே குத்திக் கொன்றுவிட்டான். பிரித்தானியரின் ஆட்சிக் காலத்தில் பெருந்தோட்டங்களில் சிங்கள தமிழ் மக்களிடையேயான உறவு எத்தகையதாக இருந்தது என்பது பற்றிய நுட்பமான ஆய்வில் எரிக் மேயர் என்ற ஆய்வாளர் விபரங்களைத் தருகிறார்.



பெருந்தோட்டங்களின் எல்லைப்புறத்தில் அமைந்திருக்கும் சிங்களக் கிராமங்களுக்கும், சிங்களக் கிராமங்களின் எல்லையில் அமைந்திருக்கும் தோட்டக்குடியிருப்புகளுக்கும் இடையே பரஸ்பரம் நல்லுறவு நிகழவேண்டும் என்ற சி.வி.யின் கருத்து இந்த நாவலில் இழையோடுகிறது.

**மு.நித்தியானந்தன்...**

# 2024 இல் புதிய e–வணிக நியமங்களை ஏற்படுத்தும் வகையில் Daraz அறிமுகம் செய்யும் இலவச விநியோக கொண்டாட்டம்

தெற்காசியாவின் முன்னணி ஒன்லைன் eவணிக கட்டமைப்பான Daraz, புத்தாண்டை வரவேற்கும் வகையில், முதன் முறையாக Daraz இலவச விநியோக கொண்டாட்டத்தை அறிமுகம் செய்துள்ளது. 2024 ஜனவரி 27 ஆம் திகதி முதல் நடைபெறும் இந்தக் கொண்டாட்டத்தில், நாடு முழுவதையும் சேர்ந்த வாடிக்கையாளர்களுக்கு நவநாகரீகம், அழகுசாதனப் பொருட்கள், வீட்டு மற்றும் அலங்காரப் பொருட்கள் மற்றும் பல மில்லியன் கணக்கான பொருட்களை இலவசமாக விநியோகித்துக் கொள்ளக்கூடிய வசதியை அனுபவிக்க முடியும்.

எரிபொருள் விலை அதிகரிப்பின் காரணமாகவும், பெறுமதி சேர் வரி மாற்ற அதிகரிப்பாலும் போக்குவரத்து செலவுகள் அதிகரித்துள்ளதன் தாக்கத்தை குறைக்கும் வகையில், இந்தக் கொண்டாட்டத்தினூடாக, பொருள் கொள்வனவு செய்வோரின் சேமிப்பை அதிகரித்துக் கொள்ள பங்களிப்பு வழங்க எதிர்பார்க்கப்படுகின்றது. வாடிக்கையாளர்களுக்கு தமது இல்லங்களில் இருந்தவாறே சௌகரியமாக பொருட்களை கொள்வனவு செய்யும் வசதியை வழங்குவதுடன், அதிகரித்துச் செல்லும் விநியோக செலவுச் சுமையை இல்லாமல் செய்வதும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தத் திட்டத்தினூடாக, விநியோகக் கட்டணம் காரணமாக eவணிகத்தில் ஈடுபடுவதை தவிர்க்கும் வாடிக்கையாளர்களை மீண்டும் ஈடுபடுத்தி, ஒன்லைன் சொப்பிங் அனுபவத்தில் அவர்களின் ஈடுபாட்டை தொடர்ந்தும் ஊக்குவிக்கவும், அதனூடாக இலங்கையின் டிஜிட்டல் பொருளாதாரத்தை மேம்படுத்தவும் Daraz எதிர்பார்க்கின்றது.

eவணிக செயற்பாடுகளில் இலவச விநியோக நடவடிக்கையை பொருட்கொள்வனவு செய்வோர் மிகவும் பயனுள்ளதாகவும், அனுகூலமளிப்பதாகவும் தெரிவித்துள்ளமையை புள்ளிவிவரங்கள் சுட்டிக் காட்டுகின்றன. உதாரணமாக, 2023 டிசம்பர் மாதத்தில் மாத்திரம், 65%




க்கும் அதிகமான Daraz வாடிக்கையாளர்கள் இலவச விநியோகத்தை அனுபவித்துள்ளதுடன், 2023 ஜனவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் 700% அதிகரிப்பையும் வெளிப்படுத்தியிருந்தனர்.

மேலும், Daraz இலவச விநியோக கொண்டாட்டத்தினூடாக, விற்பனையாளர்களுக்கும் முன்னர் சென்றடையாத பகுதிகளுக்கு தமது பொருட்களை சென்றடையச் செய்வதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

Daraz ஸ்ரீ லங்கா செயற்பாடுகளுக்கான பணிப்பாளர் சஜித் சுஹைலி கருத்துத் தெரிவிக்கையில், “இலங்கையின் அனைத்துப் பாகங்களுக்கும் விநியோகம் என்பது, நாட்டில் eவணிக பயன்பாட்டை தொடர்ச்சியாகவும், மீண்டும் மீண்டும் பயன்படுத்துவதை ஊக்குவிப்பதற்கு அத்தியாவசியமானதாக அமைந்துள்ளது. எமது இலவச விநியோக கொண்டாட்ட காலப்பகுதியில் இந்தச் சேவை முற்றிலும் இலவசமாக வழங்கப்படுகின்றது” என்றார்.

Daraz App இல் அல்லது www.daraz.lk இல் Daraz ஒன்லைனில் பிரவேசித்து Daraz இலவச விநியோக கொண்டாட்டத்தில் பங்கேற்கலாம்.

2015 இல் நிறுவப்பட்ட Daraz, தெற்காசிய பிராந்தியத்தின் முன்னணி eவணிக கட்டமைப்பாக அமைந்திருப்பதுடன், பாகிஸ்தான், பங்களாதேஷ், இலங்கை, நேபாளம் மற்றும் மியன்மார் ஆகிய பகுதிகளில் முன்னிலையில் திகழ்கின்றது. உலகத் தரம் வாய்ந்த சந்தைப்பகுதி தொழில்நுட்பத்தினூடாக 650,000 க்கும் அதிகமான செயலிலுள்ள விற்பனையாளர்களுக்கு 500 மில்லியன் மக்களைக் கொண்ட வேகமாக வளர்ந்து வரும் நுகர்வோர் வகுப்பை சென்றடைவதற்கு Daraz வலுவூட்டுகின்றது.

Daraz Express மற்றும் Daraz Pay போன்றவற்றினூடாக, Daraz இனால் அதிகளவு சிக்கனமாக மற்றும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட சரக்கு கையாளல் மற்றும் கொடுப்பனவு உட்கட்டமைப்பு வசதிகள் அதன் சந்தைகளில் செயற்படுத்தப்படுகின்றது. தெற்காசிய பிராந்தியத்தில் தான் சேவையாற்றும் 50 மில்லியன் நுகர்வோர்மற்றும்வியாபாரங்களுக்கு2030 ஆம் ஆண்டளவில் சம்பியனாக திகழ்வது Daraz'இன் எதிர்பார்ப்பாகும்.

**மேலதிக தகவல்களுக்கு**
**www.daraz.com எனும் இணையத்தளத்தைப் பார்க்கவும்.**
**ஊடகத் தொடர்புகளுக்கு:**
**Sheahan Ganeshan**
**sheahan.ganeshan@daraz.lk**

# போதைப் பாவனையால் பாதிப்புற்றோருக்கு புனர்வாழ்வு

**ஸாதிக் ஷிஹான்**

போதைப்பொருள் பாவனையால் பாதிக்கப்பட்ட எந்தவொரு நபரும் புனர்வாழ்வு பெற்றுக்கொள்வதற்கு 1927 என்ற விசேட தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு நச்சு மருந்துகள் மற்றும் அபாயகரமான ஔடதங்களின் பயன்பாட்டை தடுப்பதற்கான செயலணி வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஏழு நாட்கள் மற்றும் 24 மணித்தியாலங்கள் என்ற அடிப்படையில் முன்மொழிகளிலும் இந்த உதவியை பெற்றுக்கொள்ள முடியும் என்று கடற்படை தளபதியும் நச்சு மருந்துகள் மற்றும் அபாயகரமான ஔடதங்களின் பயன்பாட்டை தடுப்பதற்கான செயலணியின் தலைவருமான வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் வழங்கப்படும் ஒவ்வொரு தகவல்களின் இரகசியங்கள் முழுமையாக பாதுகாக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். கடந்த காலங்களைப் போன்று இந்த செயல்திட்டங்கள் மூலம் நன்மைகளை பெற்றுக்கொள்ளுமாறும் அவர் வேண்டுகோள் விடுத்தார். நச்சு மருந்துகள் மற்றும் அபாயகரமான ஔடதங்களின் பயன்பாட்டை தடுப்பதற்காக அமைச்சரவையின் அங்கீகாரத்துக்கமைய நியமிக்கப்பட்ட செயலணியின் செயற்பாடுகள் தொடர்பில் ஊடகங்களுக்கு விளக்கம் அளிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்று கொழும்பில் இடம்பெற்றது. மேற்படி செயலியின் தலைவரான கடற்படை தளபதியின் தலைமையில் நடைபெற்ற இந்த விசேட செய்தியாளர் மாநாட்டில் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய, தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாடு சபையின் தலைவர் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பலர் கலந்துகொண்டனர்.

# பெரும்போக நெற்செய்கையில் பாரிய வீழ்ச்சி; விவசாயிகள் கவலை

**தம்பலகாமம் குறூப் நிருபர்**

தம்பலகாமம் கமநலசேவை பிரிவுக்குட்பட்ட குரமொட்டி வெளி விவசாய நிலத்தில் அறுவடையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

குரமுட்டிவெளி, கந்தளாய் தீவு, ஆணையிறக்கம் போன்ற விவசாய நிலங்களில் சுமார் 600 ஏக்கர் வரை செய்கை பண்ணப்பட்டு அறுவடை இடம்பெற்றுவருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். சீரற்ற காலநிலை, நோய் தாக்கம் போன்ற காரணங்களால் நெற்செய்கை வீழ்ச்சி கண்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். ஒரு ஏக்கருக்கு ஐந்து மூடை அளவிலும் விளைச்சல் கிடைப்பதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். மனைவி, பிள்ளைகளின் தங்கநகைகளை அடகு வைத்து செய்யப்பட்ட வேளாண்மை செய்கை இம்முறை நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளதாக விவசாயிகள் மேலும் தெரிவிக்கின்றனர்.

## சர்வதேச நாணய நிதியத்துடன்...

நாட்டின் வருமானத்தை அதிகரிப்பதற்கு சுங்கச் சேவையை வினைத்திறனாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய அவர், எதிர்காலத்தில் அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்படவுள்ள புதிய சட்டங்கள் மற்றும் நவீனமயமாக்கல் வேலைத் திட்டம் என்பன அரச வருமானத்தை ஈட்டும் அனைத்து நிறுவனங்களையும் மாற்றியமைக்கும் என்றும் தெரிவித்தார். இங்கு தொடர்ந்தும் உரையாற்றிய ஜனாதிபதி, ரணில்,

"சுங்கத் திணைக்களம் இலங்கையின் பழமையான அரச திணைக்களங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. சுமார் 2000 வருடங்களுக்கு முன்னர் பழைய மாந்தை துறைமுகத்தில் சுங்கவரி அறவிடப்பட்டதற்கான சான்றுகள் உள்ளன. எனவே அன்றிலிருந்து அநுராதபுர காலத்திலும், கோட்டே காலத்திலும், கண்டி காலம் முதல் இன்றுவரை இந்த நாட்டின் இருப்புக்கு சுங்க வருமானம் பாரிய அளவில் பங்களித்துள்ளது.

2022 இல் நாம் எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள உதவுவதற்கு சுங்கத் திணைக்களம் ஆற்றிய பங்களிப்புக்கு நன்றி கூற வேண்டும்.

சுங்கவரி, வற்வரி மற்றும் வருமானவரி ஆகியவை உலகில் உள்ள ஒவ்வொரு நாட்டுக்கும் மூன்று முக்கிய வருமான மூலங்களாக உள்ளன. இன்று சர்வதேச வர்த்தக ஒப்பந்தங்கள், பிராந்திய வர்த்தக ஒப்பந்தங்கள் மற்றும் சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்கள் போன்ற அனைத்தின் மூலமும், நாம் எவ்வாறு வருமானத்தை அதிகரிப்பது என்பதில் கவனம் செலுத்த வேண்டும். அதற்கு தற்போதைய சுங்கச் சேவைகள் திறம்பட செயற்பட வேண்டும்.

சுங்கத் திணைக்களத்திற்கு கூடுதல் பணியாளர்களை வழங்க முடியாவிட்டாலும், செயல்திறன் ஊடாக இந்தளவு வருமானத்தை அதிகரித்துள்ளமை சிறப்புக்குரியது. நாம் இன்னும் வெகுதூரம் முன்னோக்கிச் செல்ல வேண்டும், விரைவில் நாம் கொண்டு வரவிருக்கும் புதிய சட்டத்தின் ஊடாக சுங்கம் மற்றும் ஏனைய வருமானத் திணைக்களங்களை முழுமையாக நவீனமயமாக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் ஒரு பகுதியே இது என்பதைக் கூற வேண்டும். 2022இல் பொருளாதாரம் வீழ்ந்தது. எனினும், 2023இல் நாம் எடுத்த முடிவுகளினால் அந்த வீழ்ச்சியிலிருந்து மீள்வதற்கான வழி ஏற்பட்டது. ஆனால், அது இன்னும் முடியவில்லை. இந்த ஆண்டு இறுதிக்குள், நாட்டின் வருமானத்தை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 12 வீதமாக்குவோம். 2026இல் அதனை 15 வீதமாக அதிகரித்துக்கொள்ள வேண்டும்.

எனவே தற்போதைய பொருளாதாரத்தில் இருந்து வருமானம் ஈட்ட வேண்டும். வருமானத்தை அதிகரிக்க, பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டும். இந்த பொருளாதார வளர்ச்சியை எவ்வாறு அடைவது என்ற கேள்வியை இன்று நாம் எதிர்கொண்டுள்ளோம். பழைய பொருளாதார முறையால் நாட்டை முன்னேற்ற முடியாது. ஒவ்வொரு நாளும் கடன் வாங்குவதால் நாட்டின் பொருளாதாரம் சரிந்தது. இந்த பொருளாதார முறையை மாற்ற வேண்டும்.

நாம் இன்னும் கடினமான காலத்திலேயே இருக்கிறோம். 2021இல் எம்மிடம் அத்தியாவசிய பொருட்கள் இருக்கவில்லை. எம்மிடம் உரம், எரிபொருள் இருக்கவில்லை. ஆனால் இன்று அவை உள்ளன. அதற்கு பணம் வழங்க வேண்டும். ஒவ்வொருவரும் இன்னும் வாழ்க்கைச் சுமையை உணர்கிறார்கள். பொருளாதார வளர்ச்சியுடன் இந்தப் பிரச்சினைகள் குறையும். 2022இன் பொருளாதார வீழ்ச்சியில் இருந்து ஒரே தடவையில் மீள வேண்டும் என்று நான் விரும்புகிறேன். ஆனால் அது முடியாது. எனவே நாம் புதிய பொருளாதாரத்திற்குச் செல்ல வேண்டும்.

போட்டிச் சந்தையுடன், ஏற்றுமதியை அதிகரிக்கவும், அந்நியச் செலாவணியை அதிகரிக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். பெப்ரவரி 03 ஆம் திகதி தாய்லாந்துடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திடவுள்ளோம்.

நாம் எடுக்கும் தீர்மானங்களினால் இந்த நாட்டின் எதிர்காலப் பொருளாதாரம் எவ்வாறு அமையும் என்பதைச் சிந்திக்க வேண்டும். நாம் கலந்துரையாட வேண்டும். அவை பற்றி அரசியல் கட்சிகள் கலந்தாலோசிக்க வேண்டும். அவர்கள் தேர்தலுக்குச் செல்ல வேண்டும் என்றால், இந்த நாட்டின் பிரச்சினைகளை எவ்வாறு தீர்ப்பது என்பதை அவர்கள் தெரிந்திருக்க வேண்டும்.

நிலவிலிருந்து அரிசி கொண்டுவருவதாக கட்டுக் கதைகளை கூறி அதனை செய்ய முடியாது. தற்போது எம்மால் முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டங்களுக்கு இணங்க முடியுமா? அல்லது அவற்றை மாற்றியமைக்க வேண்டுமா? என்பது தொடர்பில் ஆலோசிக்க வேண்டும்.

நாம் தற்போது சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை கைசாத்திட்டுள்ளோம். அந்த ஒப்பந்தம் இன்னும் 15 – 16 நாடுகளுடன் கைசாத்திடப்படவுள்ளது. அதிலிருந்து நாம் விடுபட்டுச் செல்ல முடியாது. அதனை நாம் எவ்வாறு ஏற்றுக்கொள்வது. அது தொடர்பில் நாம் அனைவரும் கலந்தாலோசிக்க வேண்டும். ஆனால் இன்றும் எமது அரசியல், அப்பளத்தை போலவே உள்ளது. பொரித்தவுடன் அதனை எடுத்து சாப்பிடுகிறோம். மறுதினம் மற்றொன்றை போடுகிறோம் பின்னர் அதனை மறந்துவிடுவோம்.

சமூக ஊடகங்கள் தொடர்பிலான சட்டம் கொண்டுவரப்பட்ட போது நாட்டில் கருத்துச் சுதந்திரம் பறிக்கப்படுகிறது எனக் கூச்சலிட்டனர். இருப்பினும் சட்டம் நிறைவேற்றப்பட்டது. தற்போது அதனை அனைவரும் மறந்துவிட்டனர். அதேபோல் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் சமர்பிக்கப்படவுள்ளது. இதன்போதும் மக்களின் உரிமை மீறப்படுகிறது, அனைவரையும் சிறையில் அடைக்க போகிறார்கள் எனக் கூச்சலிடுவர். பின்னர் அதை மறந்துவிடுவார்கள்.

அதன் பின்னர் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு சட்டமூலம் சமர்பிக்கப்படும் போது கல்வி ஒழிக்கப்படுவதாக கூச்சலிடுவர். பின்னர் மறந்துவிடுவார்கள். அப்பளத்தை போல் மேலே வந்த பின்னர் சத்தம் குறைந்துவிடும். இந்த அரசியலுக்கு என்னால் முடிவுகட்ட முடியாது. இருப்பினும் அவ்வாறான அரசியலே எமது நாட்டின் இந்த நிலைக்கு காரணம் என்பதை கூற முடியும்.

எமது நிலையிலிருந்து எழுந்து முன்னேறிச் செல்வதற்கான இயலுமை எமக்கு இருக்க வேண்டும். அதனால் உங்களுடைய எதிர்காலம் மாத்திரமின்றி உங்கள் பிள்ளைகளின் எதிர்காலமும் சிறக்கும். அதனால் சர்தேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் அவசியமா? இல்லையா? மாற்றங்கள் அவசியமா என்பதை பாராளுமன்றத்தில் ஆலோசிக்க வருமாறு அரசியல் கட்சித் தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கிறேன்.

அதேபோல் சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரை இங்கு அழைக்கவும் நாம் தயாராக இருக்கிறோம். அவருடன் அனைவரும் கலந்தாலோசிக்கலாம். ஒப்பந்தத்தை மாற்றுவதற்கான வழிகள் இருந்தால் அதனை எவ்வாறு செய்யலாம் எனக் கூறுங்கள். நல்ல திருத்தங்களை நாம் ஏற்றுக்கொள்வோம். இருப்பினும் தற்போதுள்ள ஒப்பந்தத்திற்கு அமைவான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது." எனத் தெரிவித்தார்.

## நான்காவது கூட்டத்தொடர்...

வரும் வகையில் நிறைவு செய்யப்பட்டு எதிர்வரும் பெப்ரவரி 7ஆம் திகதி காலை 10:30 மணி வரை ஒத்திவைத்து ஜனாதிபதியால் இந்த அதிவிஷேட வர்த்தமானி வெளியிடப்பட்டது.

பாராளுமன்ற கூட்டத்தொடர் நேற்று முன்தினம் 24 ஆம் திகதி நிறைவு செய்யப்படவிருந்த நிலையில் தவிர்க்க முடியாத காரணத்தினால் அது நேற்றைய தினத்திற்கு ஒத்திப் போடப்பட்டதாக பாராளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன. அதற்கிணங்க புதிய கூட்டத்தொடர் எதிர்வரும் பெப்ரவரி 7ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படும் என்றும் அதற்காக மிக எளிமையான வைபவமொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இறுதியான பாராளுமன்ற அமர்வுகள் கடந்த 23 மற்றும் 24 ஆம் திகதிகளில் இடம்பெற்றதுடன் பாராளுமன்றத்தின் கூட்டத்தொடர் நிறைவடைவதோடு கோப் மற்றும் கோபா உள்ளிட்ட பல தெரிவுக் குழுக்கள் இரத்தாவதுடன் புதிய கூட்டத்தொடரின் பின்னர் ஜனாதிபதியால் அந்த தெரிவுக் குழுக்களுக்கு மீண்டும் புதிதாக உறுப்பினர்கள் நியமிக்கப்படுவர் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

## எதிர்காலத்திலும் இந்திய உதவி...

நாடுகளின் பட்டியலிலும் இந்தியா இணைந்துள்ளது.

அது மட்டுமன்றி, தொழில்நுட்பத் துறையிலும் அந்த நாடு வேகமாக முன்னேறி வருகின்றது.

நிலவின் தென்துருவத்தில் கால்பதித்த முதல் நாடு என்ற பெருமையுடன் இந்தியா இன்று குடியரசு தினத்தைக் கொண்டாடுகின்றது. இந்த மகிழ்ச்சியான சந்தர்ப்பத்தில் அனைத்து இந்திய மக்களுக்கும் எனது வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கின்றேன். இந்தியா எமது தொப்புள் கொடி உறவு. இலங்கையில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருந்த காலகட்டத்தில் முந்தியடித்துக் கொண்டு, உதவி வழங்கிய நாடு அது என்பதை என்றுமே மறக்க முடியாது.

எமது மலையக பெருந்தோட்ட மக்களுக்கும் இந்தியா தொடர்ச்சியாக உதவிகளை வழங்கி வருகின்றது. அதனையும் இந்த சந்தர்ப்பத்தில் நினைவு கூருகின்றேன்.

தெற்காசியப் பிராந்தியத்தின் காவலனாக விளங்கும் இந்தியா மென்மேலும் உயர வேண்டும்" எனத் தெரிவித்தார்.

## 6 கோடி ரூபாவை மோசடி செய்த...

வத்தளையின் குடாஏதன்ட வீதியைச் சேர்ந்த பெண் ஒருவருக்கு 6,210,000.00 ரூபா பணம் பெற்றுக்கொடுத்துள்ளார். அந்தப் பெண்ணும் கட்டம் கட்டமாக பணத்தை பெற்றுக்கொண்டார்.

பணத்தை பெற்றுக்கொண்ட பின்னர் தொழில் வாய்ப்பை பெற்றுத்தர முடியாதென்று அந்தப் பெண் தெரிவித்த நிலையில், பணம் வழங்கிய நபர் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியத்தில் முறைப்பாடு செய்தார். முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்படி 37 வயதுடைய திருமணமாகாத அந்தப் பெண்ணை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக அதிகாரிகள் கைது செய்துள்ளனர். இதுவரை அந்தப் பெண் தொடர்பாக 16 முறைப்பாடுகள் பணியகத்துக்கு கிடைத்துள்ளதாகவும் அந்த வகையில் இதுவரை அவர் 6 கோடி ரூபாவுக்கும் அதிகமான பணத்தை மோசடி செய்துள்ளதாகவும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்தது.

நாடளாவிய ரீதியில் பலரிடம் அந்தப் பெண் பண மோசடி செய்துள்ளதுடன், வங்கி அதிகாரிகள் மற்றும் சட்டத்தரணிகள் உட்பட உயர் பதவிகளிலுள்ளோரும் அவரது மோசடிக்கு அகப்பட்டுள்ளதாகவும், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்தது.

## பெப்ரவரி மாதம் 120 மெகாவோட்...

மூலம் நீரில் மிதக்கும் சோலார் பெனல்களைப் பயன்படுத்தி 3,077 மெகாவோட் மின்சாரத்தை உற்பத்தி செய்து தேசிய மின்கட்டமைப்பில் இணைக்க முடியும் எனவும் அதற்குப் பொருத்தமான நீர்த்தேக்கங்கள் ஏற்கனவே அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் உரையாற்றுபோதே இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் தெரிவித்த இராஜாங்க அமைச்சர், உணவு உற்பத்தியை அதிகரிப்பதன் ஊடாக தேசிய உணவுப் பாதுகாப்பிற்கு பங்களிப்பதையே 2024ஆம் ஆண்டில் நீர்ப்பாசன அமைச்சின் முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளோம்.

அத்துடன் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்த வருட வரவு, செலவு திட்டத்தில் நீர்ப்பாசன அமைச்சுக்கு 23,413 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளார். இதில் நீர்த்தேக்க பராமரிப்புக்காக 6,913 மில்லியன் ரூபாவும் பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு 16,500 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

மகாவலி அபிவிருத்தி அதிகார சபைக்கு உள்நாட்டு நிதியாக 4,678 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் 1,590 மில்லியன் ரூபா விவசாயத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளதுடன், கால்நடை மேம்பாட்டிற்கு 930 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

நீர்ப்பாசன அமைச்சின் ஊடாக பல பாரிய பல்நோக்கு அபிவிருத்தித் திட்டங்கள் ஏற்கனவே முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதில் பெரும்பாலான திட்டங்கள் வெளிநாட்டுக் கடன்களின் கீழ் செயல்படுத்தப்படுகின்றன. அந்த வகையில் ஆரம்பிக்கப்பட்ட உமாஓயா திட்டத்தின் பணிகள் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளன. எனவே, பெப்ரவரி 15ஆம் திகதிக்குள் 120 மெகாவோட் மின்சாரத்தை தேசிய மின் கட்டமைப்பில் சேர்க்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், தேசிய மின் கட்டமைப்பில் சூரிய சக்தி மற்றும் நீர் மின்உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்தில் இந்த ஆண்டு பல்வேறு சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளன.

இதன் கீழ், நிலம், கூரைகள் மற்றும் நீரில் மிதக்கும் சூரிய மின்கலங்கள் பயன்படுத்தப்பட உள்ளன.

நீரில் மிதக்கும் சோலார் பேனல்கள் மூலம் மின் உற்பத்தியை மேற்கொள்வதற்காக 31 நீர்த்தேக்கங்கள் ஏற்கனவே அடையாளம் காணப்பட்டுள்ளன. அந்த வகையில், இலங்கை மகாவலி அதிகாரசபைக்கு சொந்தமான 14 நீர்த்தேக்கங்களிலிருந்து 2,524 மெகாவோட் மின்சாரத்தையும் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குச் சொந்தமான 17 நீர்த்தேக்கங்களிலிருந்து 553 மெகாவோட் மின்சாரத்தையும் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டங்கள் அனைத்தையும் மின்சார அமைச்சுடன் இணைந்து செயல்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது" என்றார்.

## ரயிலில் செல்ஃபி எடுக்க முற்பட்ட...

பயணித்துக்கொண்டிருந்த போதே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதுடன், தெமோதர ஆதார வைத்தியசாலையில் இப்பெண் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக, எல்ல பொலிஸார் தெரிவித்தனர்.


இலங்கைக்கு சுற்றுலா மேற்கொண்ட 25 வயதுடைய கிறிஸ்டினா அலக்வானா என்பவரே இந்த அசம்பாவிதத்தை எதிர்நோக்கியுள்ளார். இவர் நேற்றுக் காலை ஹிக்கடுவையிலிருந்து ஒருநாள் பயணமாக எல்ல நோக்கிப் பயணித்த போதே ரயிலிலிருந்து தவறி விழுந்துள்ளார். இதனைத் தொடர்ந்து இவரது கடவுச்சீட்டு உள்ளிட்ட ஏனைய ஆவணங்களை இவர் தங்கியிருந்த ஹோட்டலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

# இன்றைய பலன்கள்


(27.01.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)



**மேஷம்:**
குடும்பம் சீராக நடைபெற்று வரும். இளைஞர்கள் தங்கள் பணிகளுக்காக வெளியூர் பயணிப்பர். புதிய ஒப்பந்தங்களை பெற உழைப்பர்.



**ரிஷபம் :**
கலைஞர்கள் தொழிலில் அதிக அக்கறையுடன் செயல்படுவர். புதிய ஒப்பந்தங்கள் கிடைக்க வாய்ப்புள்ளது.



**மிதுனம்:**
குடும்பத்தில் சில பிரச்சினைகள் தலை காட்டினாலும் பாதிப்பு இருக்காது. கலைஞர்கள் கடினமான பணிகளில் நேரடியாக பங்கு கொண்டு துன்பங்களை எதிர்கொள்வர்.



**கடகம்:**
கலைஞர்கள் புதிய வாய்ப்புகளை பெற முயற்சிப்பார். தேவையான வருமானம் கிடைக்கும்.



**சிம்மம்:**
கவிஞர்கள் பிரபல நிறுவனத்தில் இருந்து வாய்ப்புகளை பெறுவர். குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும்.



**கன்னி:**
காரியங்கள் நண்பர்களின் உதவியுடன் செயல்படும். பொருளாதாரம் திருப்திகரமாக இருக்கும். தொழில் நன்றாக நடைபெறும்.



**துலாம்:**
பங்குச்சந்தை சுமாராக நடைபெறும். கடன் பிரச்சினைகள் ஏற்படலாம். முக்கிய ஆவணங்களில் கவனம் தேவை.



**விருச்சிகம்:**
கலைஞர்கள் பிரபல நிறுவனங்களில் இருந்த புதிய ஒப்பந்தங்கள் பெற்று மகிழ்வர். தன வரவுகள் வந்து சேரும்.



**தனுசு:**
உத்தியோகத்தர்கள் உயர் அதிகாரிகளிடத்தில் சில மனஸ்தாபங்களுக்குள்ளாக நேரிடலாம். சில காரியங்களுக்கு நண்பர்கள் ஆதரவு தேவைப்படும்..



**மகரம்:**
கலைஞர்கள் பிரபல நிறுவனத்தின் ஒப்பந்தம் பெற்று மகிழ்வர். பங்குச்சந்தை சிறப்பாக நடைபெற்று லாபம் தரும்.



**கும்பம்:**
சுப காரியங்களை நடத்த முயற்சிபீர்கள். கலைஞர்கள் பணிகளில் உற்சாகமாக ஈடுபடுவர். புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகலாம்.



**மீனம்:**
குடும்பத்தில் சிறுசிறு பிரச்சனைகள் இருந்தாலும் அவற்றை சாமர்த்தியமாக சமாளித்து விடுவீர்கள். இளைஞர்கள் புதிய ஒப்பந்தங்களை பெற முயற்சிப்பர்.

# சனத் நிஷாந்த எம்.பி. பதவி வெற்றிடம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த மரணமடைந்ததை அடுத்து பாராளுமன்ற உறுப்பினர் பதவியொன்று வெற்றிடமாகியுள்ளதாக, பாராளுமன்றம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளது.

பாராளுமன்ற பிரதி செயலாளர் நாயகம் மற்றும் ஆளணி பிரதானியான சட்டத்தரணி சமிந்த குலரத்ன, இது தொடர்பாக தேர்தல் ஆணைக்குழுத் தலைவருக்கு அறிவித்துள்ளார்.

பாராளுமன்ற தேர்தல் சட்டத்தின் 64ஆவது சரத்துக்கமையவே பாராளுமன்ற பிரதி செயலாளர் நாயகம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

## ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின்...

கூட்டணியொன்றை உருவாக்குவதற்கு ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருவதாகவும் அதனுடன் சம்பந்தப்பட்ட ஏனைய கட்சிகள் மற்றும் அரசியல் பிரமுகர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

புதிய கூட்டமைப்பின் தலைவருக்கு தனித்து தீர்மானம் மேற்கொள்வதற்கான அதிகாரம் வழங்கப்பட மாட்டாதென்றும் சந்திரிக்கா குமாரதுங்க பண்டாரநாயக்க மற்றும் கூட்டமைப்பில் இணையும் ஏனைய அனைத்துக் கட்சிகளின் தலைவர்களும் உள்ளடங்கும் வகையில் தலைமைத்துவ சபையொன்றை உருவாக்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அந்தக் கூட்டமைப்பின் 50% அதிகாரத்தை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கொண்டிருப்பதுடன் ஏனைய கட்சிகள் மீதமான 50% அதிகாரத்தைக் கொண்டிருக்கும் வகையில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## வெளிநாட்டு பிரஜை பலி...

ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் பயணம் செய்த அதிசொகுசு வான், நிறுத்தி வைக்கப்பட்ட லொறியொன்றுடன் மோதி விபத்து சம்பவித்துள்ளதுடன், ஹிக்கடுவை பிரதேசத்திலுள்ள சுற்றுலா ஹோட்டலொன்றிலிருந்து கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு பயணித்த போதே இவர்கள் இந்த அசம்பாவிதத்தை எதிர்நோக்கியுள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர். இந்த விபத்தை தொடர்ந்து வான் சாரதியை பொலிஸார் கைது செய்துள்ளதுடன், விபத்து தொடர்பாக அத்துருகிரிய கட்டுப்பாட்டு நிலையப் பொலிஸார் மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

## வடக்கு, கிழக்கு, ஊவாவில்...

மாகாணங்களிலும் காலி, மாத்தறை ஆகிய மாவட்டங்களிலும் பனியுடன் கூடிய காலநிலை நிலவுவதற்கான சாத்தியக்கூறு உள்ளதாகவும், வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் தெரிவித்தது.

## லிட்ரோவின் வருமானத்தில்...

ஜனாதிபதி செயலகத்தில் வைத்து நேற்று (26) இந்தக் காசோலையை கையளித்துள்ளார்.

இதற்கமைய லிட்ரோ நிறுவனம் இதுவரையில் 3 பில்லியன் ரூபாவை திறைசேரிக்கு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நிகழ்நிலை காப்பு சட்டத்தின்...

அதேவேளை, நிகழ்நிலை காப்புச் சட்டத்தின் மூலம் எதிர்வரும் தேர்தலின் போது சுயலாபம் பெற்றுக்கொள்வது அரசாங்கத்தின் நோக்கம் அல்லவெனவும், அவர் தெரிவித்தார்.

நிகழ்நிலை காப்புச் சட்டம் நடைமுறைப்படுத்தும் விதம் தொடர்பாக ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் கருத்து வெளியிட்ட அவர்,

"நாட்டில் பொருளாதாரம் பலமடைந்து வரும் நிலையில் சமூகத்தை சிறந்த முறையில் முன்னேற்றமடைய செய்வதே அரசாங்கத்தின் நோக்கமாகும். நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில் எந்தவிதத்திலும் அந்தச் சட்டம் சமூக வலைத்தளங்களை கட்டுப்படுத்துவதற்கு பயன்படுத்தப்பட மாட்டாது.

அத்துடன், அதனை வைத்து அரசாங்கம் அரசியல் இலாபங்களை பெற்றுக்கொள்ளவும் போவதில்லை. சமூகத்தின் முன்னேற்றத்தை கருத்திற்கொண்டே அந்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது" எனத் தெரிவித்தார்.

# கிழக்கின் குரல்



## கிழக்கு மாகாண ஆளுநருக்கு "Man of East" விருது







(கந்தளாய் தினகரன் நிருபர்)

சமத்துவ பொங்கல் விழா நேற்று திருகோணமலையில் நடைபெற்றது.

இதில் கிழக்கு மாகாண ஆளுநர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டதுடன், அனைத்து மதத்தவர்களும் பொங்கல் வைத்து மகிழ்ந்தனர்.

கிழக்கிலுள்ள 14 சிவில் அமைப்புகள் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநரின் சேவையை பாராட்டி 'Man of East' என்ற விருதை ஆளுநருக்கு வழங்கி வைத்தனர்.

தமிழர் பேரவை, மக்கள் மறுமலர்ச்சி மன்றம், பசுமை இல்லம், புதிய உதயம், பெண்கள் உதவி அறக்கட்டளை RI association, திருக்கோணமலை மாவட்ட வணிக சங்கங்கள் உட்பட பல அமைப்புகள் இணைந்து 'Man of East' என்ற பட்டத்தை செந்தில் தொண்டமானுக்கு வழங்கி வைத்தனர்.

கிழக்கு மாகாணத்தில் பல வருடகாலமாக பல ஆளுநர்கள் இருந்த போதிலும் அவர்கள் செய்யாத பல வேலைத்திட்டங்களை 5 மாத காலக்கட்டத்தில் செய்து முடித்தமைக்காகவும், ஆளுநரின் ஏற்பாட்டில் கிழக்கு மாகாணத்தில் நடைபெற்ற பொங்கல் விழா நிகழ்வு உலக சாதனை விருதுக்கு பரிந்துரைக்கப்பட்டமைக்காகவும் இவ் விருது வழங்கி வைக்கப்பட்டது. மேலும் இந்நிகழ்வில் மாற்றுத்திறனாளிகளும் பொங்கல் வைத்து சமத்துவ பொங்கல் விழாவை சிறப்பித்தனர்.

## மக்களின் பொருளாதார சுமையை குறைக்க துரித நடவடிக்கை

### இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன்

(கல்லடி குறூப் நிருபர்)





நாட்டை பொருளாதார ரீதியில் முன்னேற்றுவதற்கு அரசாங்கம் பல்வேறுபட்ட முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு ஆரையம்பதியில் நடைபெற்ற வெல்த் கோப் வங்கியின் நான்காவது கிளை திறப்பு விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தென்மாகாணங்களில் காணப்படும் இவ்வங்கியானது வடகிழக்கு மாகாணங்களில் அதிலும் குறிப்பாக மட்டக்களப்பில் தமது நான்காவது கிளையை இன்று திறந்துவைத்துள்ளது.

மக்களுடைய சுமையை குறைப்பதற்கு அரசாங்கம் கூடிய கவனம் எடுத்து செயற்பட்டு வருவதுடன், எமது மாவட்டத்தில் விலை கட்டுப்பாட்டு சபையின் ஊடாக நிர்ணய விலையில் பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றனவா என்பதை கட்டுப்படுத்த எதிர்வரும் நாட்களில் உரிய திணைக்களத்தினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் பல சுற்றிவளைப்புக்களை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளோம். இதன் மூலம் மக்களுக்கு நியாயமான விலையில் அத்தியாவசிய பொருட்களை பெற்றுக்கொள்ள வாய்ப்பு ஏற்படும் என அவர் தெரிவித்தார்.

வெல்த் கோப் வங்கியின் தலைவர் தேசகீர்த்தி மொகோட்டி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன், மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் தட்சணகௌரி டினேஸ், வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி காஞ்சன பபசர மனஞ்சேன, மண்முனைப்பற்று பிரதேச சபையின் செயலாளர் ஜே.சர்வேஸ்வரன், வங்கி உத்தியோகத்தர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே ஐ.தே.கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர்

(கிண்ணியா மத்திய நிருபர்)



நாட்டை பொருளாதாரரீதியான மீட்டெடுக்கக்கூடிய ஆற்றலும் ஆளுமையும் கொண்ட தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே ஐ.தே. கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரங்கே பண்டார தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்தின், ஐக்கிய தேசியக் கட்சி கூட்டம் நேற்று கட்சி மத்திய காரியாலயத்தில் நடைபெற்றது.இக்கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

ஜனாதிபதித் தேர்தலே முதலில் நடைபெறவுள்ளது. அதனையடுத்தே பாராளுமன்றத் தேர்தல் மாகாண சபை தேர்தல் உள்ளூராட்சி மன்ற தேர்தல் என்பன நடைபெறவுள்ளன. அனைத்து தேர்தல்களிலும் வாக்களிப்பு நிலையங்களை மையமாக வைத்து, எமது தேர்தல் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

நாட்டை பொருளாதார ரீதியாக மீட்டெடுக்கக்கூடிய ஆற்றலும் ஆளுமையும் கொண்ட, எமது தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே எமது கட்சி சார்பான ஜனாதிபதி வேட்பாளராவார். வெற்றி பெறக்கூடிய வாய்ப்பும் அவர் பக்கமே இருக்கின்றது என்று தெரிவித்தார்.

இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட, மூதூர், கந்தளாய், சேருவிலே ஆகிய தேர்தல் தொகுதி அமைப்பாளர்கள், வட்டார அமைப்பாளர்கள் இதில் கலந்து கொண்டனர்.



வரலாற்று பிரசித்தி பெற்ற உகந்தை மலை முருகன் ஆலய தைப்பூசத் திருவிழாவும் பாற்குட பவனியும் நேற்றுமுன்தினம் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ சீதாராம் குருக்கள் தலைமையில் இடம்பெற்ற போது எடுக்கப்பட்ட படம். (படம்: காரைதீவு குறூப் நிருபர்)

## அமரர். சனத் நிஷாந்த கிராமங்களுக்கு குடிநீர் வசதிகளை வழங்குவதில் முன்னின்று செயற்பட்டார்

### இரங்கல் செய்தியில் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன்



அமரர். சனத் நிஷாந்த, கிராமங்களுக்கு குடிநீர் வசதிகளை வழங்குவதில் முன்னின்று செயற்பட்டவர் என இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் மரணம் தொடர்பில் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி குழு தலைவரும், தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தனது இரங்கல் செய்தியை வெளியிட்டுள்ளார். என் சக இராஜாங்க அமைச்சரும், நண்பருமான சனத் நிஷாந்த நேற்று அதிகாலை இடம்பெற்ற வீதி விபத்தில் அகால மரணமானார் எனும் செய்தி என்னை பெரிதும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

எனது சொந்த மாவட்டமான மட்டக்களப்பு மாவட்டம் உட்பட நாடு பூராகவும் தன்னாலான பலதரப்பட்ட மக்கள் பணிகளை நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சினூடாக முன்னெடுத்திருந்தார். அதன்காரணமாக பல கிராமங்களுக்கு குடிநீர் வசதிகளையும் ஏற்படுத்தியிருந்தார். அவ்வாறான ஓர் மக்கள் தலைவனை இழந்து நிற்கின்றோம்.

## ஆளுமை விருத்தி பயிற்சி

(தோப்பூர் தினகரன் நிருபர்)

மூதூர் பிரதேச செயலாளர் எம். பீ.எம்.முபாறக்கின் வழிகாட்டுதலுக்கு அமைவாக மூதூர் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பதிவுசெய்யப்பட்ட இளைஞர் கழகங்களினுடைய 60 இளைஞர், யுவதிகளுக்கான ஒரு நாள் தலைமைத்துவ, ஆளுமை விருத்திதொடர்பான பயிற்சியுடன்கூடிய செயலமர்வானது மூதூர் பிரதேச செயலக உதவிப்பிரதேச செயலாளர் ஏ.பிரசாந்தன் தலைமையில் மூதூர் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.

## பேருவளை, மஹாகொடை ILM சம்சுதீன் வித்தியாலய பழைய மாணவர்களுக்கான கிரிக்கெட் போட்டி

தினகரன், தினகரன் வாரமஞ்சரியின் ஊடக அனுசரணையுடன் பேருவளை, மஹாகொடை மேமா/ களு/ஐ.எல்.எம். சம்சுதீன் வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கம் மீண்டும் பாடசாலையில் ஒன்றுகூடும் முகமாக ஏற்பாடு செய்துள்ள கிரிக்கெட் சுற்றுப்போட்டி எதிர்வரும் 27, 28, 29ஆம் திகதிகளில் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மேமா/ களு/ ஐ.எல் . எம். சம்சுதீன் வித்தியாலயத்தின் அதிபர் திருமதி எம். எச். எப். ஷியானா தலைமையில் இந்நிகழ்வுகள் நடைபெறும்.

பேருவளை பிரதேச கல்விப் பணிப்பாளர் டபிள்யூ ஏ ஜே யூ சோமரத்ன, பேருவளை பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி ஆகியோர் 27ஆம் திகதி பிரதம அதிதியாக கலந்து கொள்வார்கள்.

வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ. யூ. விக்ரமாராச்சி, எஸ். ஜெயகுமார், எம். ஐ. எம் இல்யாஸ், சமிந்த வாஸ் ஆகியோர் 29ஆம் திகதி பிரதம அதிதியாக கலந்து கொள்வார்கள். 1992ஆம் ஆண்டில் இருந்து 2022 ஆம் ஆண்டு வரை க.பொ. த. சா. த பரீட்சைக் தோற்றிய மாணவர்கள் இதில் கலந்து கொள்ளவுள்ளார்கள். இவ்வாண்டுகளில் கல்வி பயின்ற மாணவர்களைக் கொண்ட 29 அணிகள் இப்போட்டிகளில் பங்குபற்றவுள்ளதாக பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் செயலாளர் மஹிதி ஹசன் தெரிவித்தார்.



# தினகரன் வர்த்தக உலா

சம்ஸ் பாஹிம்

## பயன்படுத்திய வாகனங்கள் மீது VAT; கறுப்புச் சந்தைக்கு வழிவகுக்கிறது



புதிதாக விதிக்கப்பட்டுள்ள VAT வரியானது பயன்படுத்திய வாகனங்களுக்கும் விதிக்கப்படுவதால், இத் தொழில்துறையில்கறுப்புச்சந்தையை உருவாக்குவதற்கு துணைபோவதாக Ceylon Motor Traders Association (CMTA) (சிலோன் மோட்டார் வாகன வர்த்தகர்கள் சங்கம்) தெரிவித்துள்ளது. அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள அச்சங்கம், பயன்படுத்திய வாகனங்களின் சந்தை விலை உயர்வதன் காரணமாக, நாட்டின் சாமானியர்கள் பாதிக்கப்படுகின்றனர் என சுட்டிக்காட்டியுள்ளது.

சமீபத்திய VAT அமுலாக்கமானது மோட்டார் வாகன வர்த்தகத்தில் பாரிய கவலைகளைத் தோற்றுவித்துள்ளது. இந்த நிறுவனங்கள் வாகனங்களை விற்கும் போது, புதிதாக விதிக்கப்பட்ட VAT வரியால் மேலதிகமாக 18% விலை அதிகரிப்புக்கு வழிவகுக்கின்றது. மறுபுறம், பெரும்பாலும் பண பரிவர்த்தனைகளில் ஈடுபடும் முறையற்ற நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களால், இந்த மேலதிக வரிச் சுமையின்றி வர்த்தகத்தில் ஈடுபட முடிகின்றது. அவர்களுக்கு அதிக போட்டித் தன்மை கொண்ட 18% நன்மையை இது வழங்குகிறது. இந்த நிலைமையானது, அதிகாரபூர்வ நிறுவனங்களுக்கு கடுமையான அச்சுறுத்தலை ஏற்படுத்துவதோடு, கறுப்புச் சந்தை போட்டியாளர்களுக்கு சாதகத் தன்மையை ஏற்படுத்தியுள்ளது.

இதன் காரணமாக, பயன்படுத்தப்பட்ட வாகன விற்பனையானது, இத்தகைய கறுப்புச் சந்தை வியாபாரிகளிடம் கொண்டு செல்லப்படுவதோடு, பயன்படுத்திய வாகனங்கள் மீதான VAT வரி மூலம் அரசாங்கம் எதிர்பார்க்கும் வருமானத்தை அடைய முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

அது மாத்திரமன்றி, பயன்படுத்திய வாகன வணிகத்திலிருந்து, அதிகாரபூர்வ நிறுவனங்கள் முழுமையாக வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டால், அத்தகைய நிறுவனங்களிடமிருந்து முன்பு பெற்ற வருமான வரியைக் கூட அரசாங்கம் இழக்க நேரிடும் என்பது குறிப்பிடத்தக்கது.

CMTA சிரேஷ்ட பிரதித் தலைவர் விரான் டி சொய்சா இது தொடர்பில் தெரிவிக்கையில், "இந்தச் சூழலைப் பயன்படுத்தி கறுப்புச் சந்தை வியாபாரிகள் ஏற்கனவே மோட்டார் வாகனங்கள் மற்றும் இரு சக்கர வாகனங்களின் விலைகளை அதிகரித்துள்ளனர். இதனால் நாட்டின் சாமானியர்கள் பாதிக்கப்படுகின்றனர். அத்துடன், பயன்படுத்தப்பட்ட வாகனங்களை ஒவ்வொரு முறையும் வாங்கும் போதும் விற்கும் போதுமான சுழற்சியில், VAT வரி காரணமாக விலை மேலும் அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. பயன்படுத்திய வாகன வாடிக்கையாளர்களை VAT வரி எவ்வாறு பாதிக்கின்றது என்பதற்கான ஒரு சிறு விளக்கமே இதுவாகும்." என்றார்.

இது தொடர்பாக தெரிவித்த CMTA தலைவர் சாரக பெரேரா, "வாகனத்தின் இலாப எல்லைக்குட்பட்ட வகையில் VAT வரியை வசூலிக்க நாம் அரசாங்கத்திடம் முன்மொழிந்துள்ளோம். இது பாரிய விலை உயர்வை ஏற்படுத்தாது என்பதோடு, அதிகாரபூர்வமான நிறுவனங்கள் தங்கள் வணிகத்தை தொடர்ச்சியாக முன்னெடுக்கவும், பயன்படுத்திய வாகன விற்பனையின் மூலமான VAT வரியை அரசாங்கம் வருமானமாக முறையாக ஈட்டவும் உதவும். இப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படாவிட்டால், இறக்குமதி இடைநிறுத்தத்தால் ஏற்கனவே 15,000 இற்கும் மேற்பட்ட தொழில்வாய்ப்புகளை இழந்துள்ள இத்தொழில்துறையில் மேலும் வேலை இழப்புகள் ஏற்படலாம்." என சுட்டிக்காட்டினார்.

## அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கான டிஜிட்டல் நோக்கத்தை செயற்படுத்தும் HUTCH

மீளெழுச்சி பெறும் இலங்கைக்கு, 2024 இலும் அதற்குப் பின்னரும் அதன் முழுத் திறனையும் அடைவதற்காக, விரைவான டிஜிட்டல் மாற்றம் அவசியமாகின்றது. டிஜிட்டல் புத்தாக்க கண்டுபிடிப்புகளைத் தழுவுவது இதற்கான ஒரு தெரிவு மாத்திரமல்லாது, ஒரு தேவையுமாகும். உரிய தொலைபேசி இணைப்பு வசதி மற்றும் தரவுச் சேவைகள் மூலம் எமது மக்களின் எதிர்காலத்தை வடிவமைக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் கொண்ட உலகத்திற்கான பாதையை திறப்பதற்கான திறவுகோல் இதுவாகும். இலங்கையின் அதிவேகமாக வளர்ந்து வரும் கைடயக்கத் தொலைபேசி புரோட்




பேண்ட் வலையமைப்பு எனும் வகையில், மேம்பட்ட 4G மற்றும் 5G தயார் நிலை வலையமைப்பை HUTCH Sri Lanka கொண்டுள்ளது. இது இலங்கையை டிஜிட்டல் ரீதியில் செழிப்படையச் செய்யும் பொருளாதார இலக்கை நோக்கி கொண்டு செல்ல உதவும்.

தனது பரந்து விரிந்த வலையமைப்பின் மூலம் அனைத்து இலங்கையர்களுக்கும் எல்லையற்ற சாத்தியங்களை செயற்படுத்தும் டிஜிட்டல் ஊக்கி எனும் வகையில், HUTCH Sri Lanka அதன் புதிய மற்றும் புத்தாக்கமான பிரசாரத்தை வெளியிட்டுள்ளது. புகழ்பெற்ற மற்றும் உலகளாவிய ரீதியில் பாராட்டப்படும் பிரபல கிரிக்கெட் வீரரான குமார் சங்கக்காரவும் இந்த பகிரப்பட்ட நோக்கத்திற்கான பயணத்தில் வர்த்தகநாம பங்குதாரராக இணைந்துள்ளார்.

HUTCH இன் பயணம் குறித்து கருத்துத் தெரிவித்த HUTCH Sri Lanka பிரதம நிறைவேற்று அதிகாரி சௌமித்ர குப்தா, "டிஜிட்டல் எதிர்காலத்தை நோக்கி HUTCH வலையமைப்பை கொண்டு செல்வதானது, இலங்கையின் உள்ளீர்க்கப்பட்ட வளர்ச்சிக்கான எமது ஆர்வத்தை மேலும் தூண்டுகிறது. சமூகங்களை மேம்படுத்தவும், வளமான அனுபவங்களைக் கொண்ட உலகத்திற்கான பாதையை திறக்கவும் நாம் அயராது பாடுபட்டு வருகிறோம். புதிய சாத்தியங்கள் மற்றும் வாய்ப்புகளை உருவாக்கும் ஒரு சிறந்த தெரிவு HUTCH யிடம் எப்போதும் காணப்படுகின்றது.

## இலங்கையின் சமகால கலையினை ஆதரிக்கும் MMCA இலங்கை

இலங்கையின் சம கால கலையானது தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களில் சீரானதோர் அங்கீகாரத்தை அதிகளவில் பெற்று வருகிறது. இலங்கையின் நவீன மற்றும் சம கால கலையினைக் காட்சிப்படுத்தும் முதலாவதும் தனியாயனதுமான அருங்காட்சியகம் என்ற வகையில், அவற்றை ஆதரிக்க வேண்டிய தேவை குறித்த விழிப்புணர்வை உருவாக்குவதிலும் அவை பற்றிப் பார்வையாளர்களுக்கு அறியத் தருவதிலும் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் அமைப்புகளில் ஒன்றாக நவீன மற்றும் சமகாலக்கலைக்கான இலங்கை அருங்காட்சியம் (MMCA இலங்கை) விளங்குகிறது.



பிராந்தியம் ஒன்றில் சமகாலக் கலையினை ஆதரிப்பது என்பது படைப்பாற்றலை வளர்த்து விடுவது என்பது மட்டுமல்லாமல், அப் பிராந்தியத்தின் கலாச்சார அடையாளத்தைப் பாதுகாத்துக் கொண்டாடிக் கொள்வது மாகும். இலங்கையின் வளமான கலாச்சாரப் பரம்பரியம், பல்வேறுபட்ட நிலப்பரப்புகள் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் என்பவை அதன் சமூகத்தின் சிக்கலான வடிவமைப்புகளைப் பிரதிபலிக்கும் கலைக்களத்தின் விரிவாக்கத்திலே பங்களிப்புச் செய்துள்ளன. நாட்டின் சமகால கலைக் களத்திற்கான வளங்களையும் கல்வி மற்றும் வெளிப்பாடுகளையும் வழங்குவதன் மூலம் இலங்கைத் தீவானது அயராது உழைக்கும் அதன் கலைஞர் சமுதாயத்தை வளர்த்தெடுக்க உதவி நல்குவதுடன் அவர்களது குரல் தேசத்திலும் சர்வதேசத்திலும் எதிரொலிப்பதனை உறுதிப்படுத்தவும் முடியும். மிக முக்கியமாக, நாட்டின் அடையாளத்தை வடிவமைப்பதிலும் நாட்டு மக்கள் மத்தியில் பெருமைமிகு கலாச்சார உணர்வினை வளர்த்தெடுப்பதிலும் அவர்களது முக்கிய பங்கினை இலங்கையின் சமகால கலையின் புரவலர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

உள்ளூர் கலைஞர்களுடன் புரவலர்களை இணைத்துக் கொள்வதும் உள்ளூர் மற்றும் சர்வதேச புரவலர்களுக்கும் இலங்கையின் கலைக்களத்திற்கும் இடையில் ஆதரவான தொடர்புகளை இலகுபடுத்துவதும் MMCA இலங்கையின் முயற்சிகளில் பிரதானமானதொரு பாகமாக அமைகிறது. இம் முயற்சியின் விளைவாக, 'அந்நியர்' எனும் தலைப்பிலான அவர்களது கடந்த கண்காட்சியானது முறையே ஐக்கிய இராச்சியத்திலும் இந்தியாவிலும் வசிக்கும் அனோஜி அமரசிங்க மற்றும் ஹியூ மாச்சண்ட் மற்றும் ராதிகா சோப்ரா மற்றும் ராஜன் ஆனந்தனின் சிறந்த ஆதரவைப் பெற்றுக் கொண்டது.

## ரூ. 1 கோடிக்கும் அதிக இலாபமீட்டிய பாலதோப்பூர் சமுர்த்தி வங்கி

(தோப்பூர் தினகரன் நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் இயங்கும், பாலத்தோப்பூர் சமுர்த்தி வங்கியானது, கடந்த 2023 ஆம் ஆண்டு கணக்கறிக்கையின் பிரகாரம் சுமார் ஒரு கோடியே 23 இலட்சம் ரூபா நிதியை வருமானமாக ஈட்டியுள்ளதாக, மூதூர் பிரதேச செயலாளர் எம்.பீ.எம்.முபாறக் தெரிவித்தார். அதாவது கடந்த ஆண்டு இவ் வங்கி மூலமாக 1 கோடியே 22 இலட்சத்து, 92 ஆயிரத்து 780 ரூபா, 32 சதம் வருமானமாக ஈட்டியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பாலத்தோப்பூர் வங்கி இலாப மீட்டும் வங்கியாக தெரிவு செய்யப்படுவதற்கு சிறப்பாக வினைத்திறனுடன் அர்ப்பணிப்பான சேவையினை ஆற்றிய, சமுர்த்தி முகாமையாளர்கள், வங்கி ஊழியர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஆகியோரைப் பாராட்டி புகழாரம் சூட்டி நினைவுச்சின்னம் வழங்கி வைக்கும் வைபவம் வங்கி முகாமையாளர் வை.லாபீர் தலைமையில் 2024.01.24 ஆந் திகதி மாலை பாலத்தோப்பூர் சமுர்த்தி வங்கி கட்டடத்தில் நடைபெற்றது.

மூதூர் பிரதேச செயலாளர் எம்.பீ.எம்.முபாறக் இதில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.



இந் நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர், திட்டமிடல் பணிப்பாளர்,நிருவாக உத்தியோகத்தர், வங்கி உத்தியோகத்தர்கள் சமுர்த்தி உத்தியோகத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். இதன்போது உத்தியோகத்தர்களை பாராட்டி நினைவுச்சின்னம் வழங்கிவைக்கப்பட்டது. இதன்போது கருத்துத்தெரிவித்த மூதூர் பிரதேச செயலாளர் எம்.பீ.எம்.முபாறக் மூதூர் பிரதேச செயலாளர் பிரிவிலிருந்து மூன்று சமுர்த்தி வங்கிகள் இலாபமீட்டும் வங்கியாக 2023 ஆம் ஆண்டு மாறியிருப்பதாக குறிப்பிட்டார்.

அதாவது தாஹா நகர் சமுர்த்தி வங்கி மூலம் 7876001.66 ரூபாவும், மூதூர் மேற்கு சமுர்த்தி வங்கி மூலம் 18896124.03 ரூபாவும் பாலத்தோப்பூர் வங்கி மூலம் 12292780.32 ரூபாவும் வருமானம் ஈட்டியிருப்பதாகவும் இங்கு குறிப்பிட்ட பிரதேச செயலாளர் தமது உத்தியோகத்தர்களின் அர்ப்பணிப்புடனான சேவையினை தாம் பெரிதும் பாராட்டுவதாகவும் தெரிவித்தார்.

## SAFA இனால் மீண்டும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட DIMO

இலங்கையில் முன்னணியில் உள்ள பல்வகைத் துறை கூட்டு நிறுவனமான DIMO, Diversified பிரிவில் ஒருங்கிணைந்த தங்க விருதையும், Integrated Reporting இற்காக மற்றுமொரு தங்க விருதையும் வென்றுள்ளதன் மூலம், South Asian Federation of Accountants (SAFA) Best Presented Annual Report Awards, Integrated Reporting Awards and SAARC Anniversary Awards for Corporate Governance Disclosures Competition 2022 ஆகிய விருது



நிகழ்வுகளில், நிறுவன அறிக்கையிடலில் DIMO நிறுவனம் கொண்டுள்ள அர்ப்பணிப்பை கோடிட்டுக் காட்டப்படுவதோடு, அதன் பிரதிபலன் சிறப்பாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

தெற்காசியாவில் பெருநிறுவன அறிக்கையிடலில் வெளிப்படைத் தன்மையைப் பேணுவதில் அதன் புத்தாக்கமான அணுகுமுறைகளின் பலனாக, DIMO இந்த விருதுகளை வென்றுள்ளது. அண்மையில் இந்தியாவில் நடைபெற்ற இவ்விருது வழங்கும் விழாவில், DIMO நிதிப் பொது முகாமையாளர் சுதத் மஹகெதர, DIMO குழும நிதித் திட்டமிடல் மற்றும் கட்டுப்பாட்டு சிரேஷ்ட முகாமையாளர் திருமதி அமாலி டி சொய்சா ஆகியோர், DIMO நிறுவனம் சார்பாக இவ்விருதுகளை பெற்றுக்கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.



உலகின் அதிவேகமாக வளர்ந்து வரும் தடகள பாதணி பிராண்டான Brooks Running, அதன் உள்ளூர் பங்காளியான Asriel Holdings (Pvt.) Ltd உடன் இணைந்து, அண்மையில் அதன் உத்தியோகபூர்வ அறிமுகப்படுத்தலை மேற்கொண்டிருந்தது. Brooks Running இன் Country Manager கார்த்திக் ஷா மற்றும் வர்த்தக நாம தூதரான இலங்கை கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் சாமிக்க கருணாரத்ன உள்ளிட்டோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## CA TAGS 2023 விருது விழாவில் சிறந்த 3 விருதுகளை தனதாக்கிய Softlogic Life

இலங்கையின் இரண்டாவது பெரிய ஆயுள் காப்புறுதி நிறுவனமான Softlogic Life ஆனது அதன் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல், ஆளுகை மற்றும் பேண்தகைமை என்பனவற்றிற்கான தனது நிலைப்பாட்டினை உறுதிப்படுத்துவதன் மூலம், 58ஆவது CA TAGS விருது வழங்கல் விழாவினில் பல விருதுகளினைத் தனதாக்கிக் கொள்வதன் மூலம் சிறந்த செயல்திறனை வெளிக்காட்டியுள்ளது. மேலும் இந் நிறுவனமானது நான்கு முக்கிய விருதுகளினை தனதாக்கிக் கொள்வதன் மூலம், எம் நாட்டின் பலம் வாய்ந்த பெருநிறுவனங்களில் ஒன்றாக தனது திறமையினைப் பறைசாற்றியுள்ளது. இச்சாதனைகள், இலங்கையில் நிதி அறிக்கையிடல் நடைமுறைகளினை மேம்படுத்துவதற்கான



அதன் தொடர்ச்சியான முயற்சிகள் ஊடக நிறுவனத்தின் வெளிப்படைத் தன்மை மற்றும் ஆளுகை என்பனவற்றிற்கு Softlogic Life இன் அர்ப்பணிப்பினை அடிக்கோடிட்டுக் காட்டியுள்ளது.

உறுதிபாடற்ற சந்தை நிலவரம் மற்றும் கடினமான பொருளாதார நிலைமைகளின் சவால்களுக்கு முகம் கொடுத்த போதிலும், Softlogic Life ஆனது குறிப்பிடத்தக்க வெற்றியினைப் பெற்றுள்ளது, இது தொடர்ச்சியான அதன் வர்த்தகம் தொடர்பான வேகத்தையும் தனிச்சிறப்புவாய்ந்த நிதி ஆற்றலினையும் நிரூபிக்கின்றது. இச்சாதனைகள் இந்நிறுவனத்தினை இலங்கையின் காப்புறுதித் துறையில் மிகவும் செல்வாக்கு மிக்கதொன்றாகவும், எம்நாட்டின் பெருநிறுவனத் துறையின் உயர் மட்டத்திலும் செல்வாக்குமிக்க வீரராக நிலைநிறுத்தி இருக்கின்றது.

CA TAGS விருதுகள் 2023 இல் அது தனதாக்கிக் கொண்ட விருதுகள் ஆவன, நிதி அறிக்கையிடலில் உயறிய தரத்தினைப் பராமரிப்பதில் Softlogic Life இன் உறுதிப்பாட்டினை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன, சவால்மிக்க சந்தை நிலவரங்களின் மத்தியிலும் கூட சிறந்து விளங்குவதற்கான அதன் அர்ப்பணிப்பினைக் காட்டுகின்றன.

## ஜப்பானுக்கு தாதியர்களை வழங்க கைகோர்த்த நவலோக மற்றும் Daiki Lanka

21 டிசம்பர் 2023 அன்று, கொழும்பு நவலோக மருத்துவமனை, Daiki Lanka (Pvt) Ltd உடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (MOU) கைச்சாத்திட்டுள்ளது, இது இலங்கையின் சுகாதாரத் துறையில் திறமையான தாதியர்களுக்கான தொழில்முறை பயிற்சி மற்றும் உயர் நிபுணத்துவ தரநிலைகளை அமைக்கும் பயணத்தில் மற்றொரு மைல்கல்லை எட்டியுள்ளது.

உலகில் முதியோர் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், தாதியர்களுக்கான தேவை அதிகமாக உள்ளது. ஜப்பானிய அரசாங்கம் தனது முதியோர் சமூகத்தை பராமரிக்க நடவடிக்கை எடுத்துள்ளது. Daiki Group ஜப்பானில் தேவைப்படும் மருத்துவ சேவைகளை வழங்குவதற்காக முதியோர் பராமரிப்பு இல்ல வசதிகள் மற்றும் மருத்துவ



சேவைகளை வழங்குகிறது. 2050 ஆம் ஆண்டில் ஜப்பானின் மக்கள் தொகையில்மூன்றில்ஒருபகுதியினர் 65 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினராக இருப்பார்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. தற்போதைய மக்கள்தொகையின்படி, அவர்களுக்கு 2 தொடக்கம் 2.5 மில்லியன் தாதியர்கள் தேவை. கையொப்பமிடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் ஜப்பானில் பணியாற்றத் தேவையான தொழில்முறை திறன்மிக்க தாதியர்களை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் நிகழ்வு நவலோக வைத்தியசாலை குழுமத்தின் பணிப்பாளர்/பொது முகாமையாளர் பேராசிரியர் லால் சந்திரசேன மற்றும் Daiki Lanka (Pvt) Ltd இன் முகாமைத்துவ பணிப்பாளர் யோசுகே நகமுரா ஆகியோரால் கொழும்பு நவலோக வைத்தியசாலை வளாகத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கொழும்பு நவலோக வைத்தியசாலையை பிரதிநிதித்துவப்படுத்தி நிறுவன தலைவர் துவான் ஜமாலன் மற்றும் பயிற்சி முகாமையாளர் சுதந்த செனவிரத்ன ஆகியோரும் கலந்துகொண்டனர்.




## பசுமை கட்டடச்சபையின் விருது வழங்கும் விழாவில் கொமர்ஷல் வங்கியின் யாழ்ப்பாணக் கிளைக்கு பிளாட்டினம் விருது

இலங்கையின் பசுமை கட்டிடச்சபையினால் (GBCSL) கொமர்ஷல் வங்கியின் யாழ்ப்பாணக் கிளைக்கு பிளாட்டினம் மதிப்பீட்டு விருது வழங்கப்பட்டுள்ளது.

GBCSL இன் 2023 விருதுகளில் இந்த விருது வழங்கப்பட்டது. இதில் கொமர்ஷல் வங்கி கவுன்சிலின் பசுமை வணிகத் தலைமை விருது 2023 இல் வங்கித்துறையில் கௌரவமான குறிப்பைப் பெற்றது.

யாழ்ப்பாண கிளை GBCSL விருதைப் பெறும் மூன்றாவது கொமர்ஷல் வங்கிக் கிளையாகும். 2022 ஆம் ஆண்டில், வங்கியின் திருகோணமலைக் கிளை கோல்ட் தர மதிப்பீட்டு விருதைப்பெற்றது, 2020 ஆம் ஆண்டில், வரலாற்று சிறப்புமிக்க காலி கோட்டையில் உள்ள கொமர்ஷல் வங்கி கட்டிடம் பிளாட்டினம் மதிப்பீட்டு விருதை பெற்றமை குறிப்பிடத்தக்கது. இலக்கம் 474,வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள கொமர்ஷல் வங்கியின் யாழ்ப்பாணக் கிளையை உள்ளடக்கிய கட்டிடம், 1973 ஆம் ஆண்டு, இந்திய மெர்கன்டைல் வங்கியின் (எம்பிஐ) மூன்று கிளைகளை வங்கி கையகப்படுத்தியபோது, வங்கியின் வசம் வந்தது. இது 202021 இல் சுற்றுச்சூழலுக்கு உகந்த செயல்பாடுகளுக்காக மீண்டும் கட்டப்பட்டு வடிவமைக்கப்பட்டது.

வங்கியின் இந்த கட்டிடம் 100kW சூரிய கூரை அமைப்புடன் பொருத்தப்பட்டுள்ளது, இது தேவையான மின்சாரத்தில் பெரும் சதவீதத்தை உற்பத்தி செய்கிறது. அத்தோடு ஒரு மழைநீர் சேகரிப்பு வசதி, தோட்டங்களுக்கு நீர்ப்பாசனம் செய்வதற்காக கழிவு நீரை மறுசுழற்சி செய்யும் அதன் சொந்த கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் கழிவு முகாமைத்துவ அமைப்பு இவற்றோடு பகல் நேரத்தில் இயற்கை ஒளியை அதிகப் படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது, மேலும் ஆற்றல் நுகர்வை குறைப்பதுடன் ஆற்றல்திறனுள்ள குளிரூட்டியுடன் பொருத்தப்பட்டுள்ளது, மேலும் குளியலறையில் உள்ள பாகங்கள் அனைத்தும் நீர்திறனுள்ளவை, கட்டிடத்தின் 'பசுமை' சான்றுகளை மேம்படுத்துகின்றன. கூடுதலாக, அதன் கட்டுமானத்தின் போது பச்சை முத்திரையிடப்பட்ட பொருட்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

# இந்திய மகளிர் பிரீமியர் லீக் தொடரில் ஒப்பந்தமானார் சமரி



## ஏலத்தில் விலைபோகாது மாற்றாக அழைப்பு

இந்திய மகளிர் பிரீமியர் லீக் தொடரில் இருந்து இங்கிலாந்தின் லோரன் பெல் விலகிக் கொண்டதை அடுத்து யுபி வொரியர்ஸ் அணி அந்த இடத்திற்கு இலங்கை மகளிர் அணித் தலைவி சமரி அத்தபத்துவை இணைத்துள்ளது.

அத்தபத்து அவரது அடிப்படை விலையான 30 இலட்சம் இந்திய ரூபாவுக்கு ஒப்பந்தமாகியுள்ளார்.

2024 மகளிர் பிரீமியர் லீக் ஏலத்தில் அத்தபத்து விலைபோகாதது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி இருந்தது. கடந்த ஆண்டு டி20 சர்வதேச கிரிக்கெட்டில் அபாரமாக செயற்பட்டதோடு 16 போட்டிகளில் 31.33 ஓட்ட சராசரியுடன் மொத்தம் 470 ஓட்டங்களை பெற்றிருந்தார்.

இதன்போது அவரது ஓட்ட வேகம் 131 ஆக இருந்ததோடு பந்துவீச்சிலும் எட்டு விக்கெட்டுகளை வீழ்த்தி இருந்தார்.

உள்ளூர் மற்றும் டி20 லீக் தொடர்களிலும் சோபித்து வந்த சமரி, மகளிர் பிரீமியர் லீக்கின் மாற்று வெளிநாட்டு வீராங்கனையாகவே சேர்க்கப்பட்டுள்ளார்.

“இங்கிலாந்து வேகப்பந்து வீராங்கனை லோரன் பெல் எதிர்வரும் 2024 டாடா மகளிர் பிரீமியர் லீக் பருவத்தில் இருந்து வெளியேறியுள்ளார். பெல்லுக்கு மாற்றாக யுபி வொரியர்ஸ் இலங்கையின் சமரி அத்தபத்துவை இணைத்துள்ளது” என்று டபிள்யு.பி.எல். ஊடக பிரிவு வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

“இந்த விளையாட்டின் அதிரடி துடுப்பாட்ட வீராங்கனைகளில் ஒருவராக இலங்கை அணித்தலைவி இருப்பதோடு அவர் 120 டி20 சர்வதேச போட்டிகளில் ஆடிய அதிக அனுபவ மிக்க வீராங்கனையாகவும் உள்ளார். அவர் தமது அடிப்படை விலையான 30 இலட்சம் இந்திய ரூபாவுக்கு ஒப்பந்தமாகியுள்ளார்” என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த பருவத்திலும் மகளிர் பிரீமியர் லீக் தொடரில் பங்கேற்றிருந்த பெல் ஒரு போட்டியில் கூட ஆடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் சுழற்பந்து சகலதுறை வீராங்கனையான சமரி அத்தபத்து வெளிநாட்டு வீராங்கனையாக எதிர்வரும் டபிள்யு.பீ.எல். தொடரில் பதினொருவர் அணியில் இடம்பெறுவதில் கடும் போட்டியை எதிர்கொள்ளவுள்ளார். ஏற்கனவே சொபி எக்லஸ்டன், அலிசா ஹீலி, டஹ்லியா மக்ராத் மற்றும் கிராஸ் ஹரிஸ் ஆகிய முன்னணி வெளிநாட்டு வீராங்கனைகள் யுபி வொரியர்ஸ் அணியில் இடம்பெற்றுள்ளனர்.

சர்வதேச கிரிக்கெட் கௌன்ஸில் அண்மையில் வெளியிட்ட கடந்த ஆண்டின் சிறந்த ஒருநாள் வீராங்கனையாக தெரிவான சமரி அத்தபத்து ஐ.சி. சியின் சிறந்த ஒருநாள் மற்றும் டி20 அணித் தலைவியாகவும் அறிவிக்கப்பட்டார். இந்த நிலையிலேயே அவருக்கு டபிள்யு.பி.எல். வாய்ப்பு கிடைத்துள்ளது.

2024 டபிள்யு.பி.எல். தொடர் எதிர்வரும் பெப்ரவரி 23 ஆம் திகதி தொடக்கம் மார்ச் 17 ஆம் திகதி வரை பெங்களூர் மற்றும் டெல்லியில் நடைபெறவுள்ளது. இதில் வொரியர்ஸ் அணி பெப்ரவரி 24 ஆம் திகதி ரொயல் சலஞ்சர்ஸ் பொங்களூர் அணியுடனான போட்டியுடன் தொடரை ஆரம்பிக்கவுள்ளது.

## 'நைட்ரஜனை' செலுத்தி முதல் மரண தண்டனை



அமெரிக்காவில் முதல் முறையாக கொலைக் குற்றவாளி கென்னத் இயுஜன் ஸ்மித்துக்கு நைட்ரஜன் வாயு செலுத்தப்பட்டு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

இந்த தண்டனைக்கு எதிராக உச்ச நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றங்களில் மேற்கொள்ளப்பட்ட இரு மேன்முறையீடுகளும் தோல்வியடைந்த நிலையில் அமெரிக்க நேரப்படி நேற்று முன்தினம் (25) முகக்கவசம் வழியாக நைட்ரஜன் வாயு செலுத்தப்பட்டு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

வாயு செலுத்தப்பட்ட இரண்டு தொடக்கம் நான்கு நிமிடங்களில் திணறியதோடு சுமார் ஐந்து நிமிடங்கள் கடுமையாக மூச்சு வாங்கிய நிலையில் அவர் உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டது என்று இந்த மரண தண்டனையை நேரில் பார்த்தவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

58 வயதான ஸ்மித் 1989 ஆம் ஆண்டு போதகர் ஒருவரின் மனைவியை கொலை செய்த குற்றச்சாட்டுக்காகவே மரண தண்டனை விதிக்கப்பட்டார்.

விச ஊசி பெருவதில் நெருக்கடி நிலவும் சூழலிலேயே அமெரிக்காவின் இரு மாநிலங்களில் நைட்ரஜன் வாயு மூலம் மரண தண்டனை நிறைவேற்றுவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

## சர்வதேச செய்திகள்

# இனப்படுகொலை நடவடிக்கையை தடுப்பதற்கு இஸ்ரேலுக்கு உத்தரவு

### சர்வதேச நீதிமன்றம் தீர்ப்பு



காசாவில் ஹமாஸுக்கு எதிராக போரிடும் இஸ்ரேல் இனப்படுகொலை நடவடிக்கைகளை தவிர்ப்பதற்கு தனது அதிகாரத்திற்கு உட்பட்டு அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு இஸ்ரேலுக்கு சர்வதேச நீதிமன்றம் நேற்று (26) உத்தரவிட்டது.

இஸ்ரேல் தனது படைகள் இனப்படுகொலையில் ஈடுபடாதிருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்றும் காசாவில் மனிதாபிமான நிலைமையை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் நீதிமன்றம் கூறியது.

இது தொடர்கில் ஒரு மாதத்திற்குள் இஸ்ரேலுக்கு அறிக்கை ஒன்றை சமர்ப்பிப்பதற்கும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

எனினும் இஸ்ரேல் இனப்படுகொலையில் ஈடுபட்டதாக தென்னாபிரிக்கா தொடுத்த பிரதான வழக்கு தொடர்பில் நீதிமன்றம் தீர்ப்பளிக்கவில்லை. இதில் 26,000க்கும் அதிகமான பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டிருக்கும் இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கையை உடன் நிறுத்தும்படியான தென்னாபிரிக்காவின் கோரிக்கையின்படி போர் நிறுத்தம் ஒன்றுக்கான உத்தரவை பிறப்பிப்பதை ஐ.நா நீதிமன்றம் தவிர்த்துள்ளது.

இந்த வழக்கை முற்றாக நிராகரிக்குமாறு நீதிமன்றத்தை கோரி இருந்த இஸ்ரேல், சர்வதேச சட்டத்தை மதிப்பதாகவும், தம்மை தற்காத்துக்கொள்ளும் உரிமை இருப்பதாகவும் குறிப்பிட்டிருந்தது.

முன்னதாக தென்னாபிரிக்கா தொடுத்த இந்த வழக்கு தொடர்பில் இந்த மாத ஆரம்பத்தில் இரு நாள் விவாதம் நடந்தது. எனினும் இனப்படுகொலையில் ஈடுபட்டதாக கூறப்படும் இஸ்ரேல் மீதான பிரதான குற்றச்சாட்டு தொடர்பிலான வழக்கு விசாரணை தொடர்ந்து இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

சர்வதேச நீதிமன்றத்தின் உத்தரவுகளை மேன்முறையீடு இன்றி செயற்படுத்துவதற்கு கடப்பாடு இருந்தபோதும், அதனை செயற்படுத்துவதற்கு நீதிமன்றத்திடம் வழிமுறைகள் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## பொருளாதாரத்தில் உயர இந்தியப் பிரதமர் உறுதி



அடுத்துவரும் சில வருடங்களுக்குள் உலகின் மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக இந்தியா வளர்ச்சி அடையும் என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

தற்போது உலகின் ஐந்தாவது பெரிய பொருளாதார நாடாக விளங்கும் இந்தியாவை அடுத்துவரும் 25 வருடங்களில் அபிவிருத்தி அடைந்த நாடாகக் கட்டியெழுப்புவதே எங்கள் இலக்கு என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குஜராத்தின் காந்தி நகரில் நடைபெற்ற உலகளாவிய மாநாட்டினை அங்குரார்ப்பணம் செய்து வைத்து உரையாற்றிய பிரதமர் மோடி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

உலகின் பல நாடுகளது தலைவர்கள் பங்குபற்றிய இம்மாநாட்டில் அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், இந்தியா 100 ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடும் போது அபிவிருத்தி அடைந்த நாடாகத் திகழ வேண்டும். அதனை அடிப்படையாகக் கொண்டு கடந்த 10 ஆண்டுகளில் நாம் சீர்திருத்தங்களை முன்னெடுத்து வருகிறோம். அதன் பயனாக எமது பொருளாதாரத்தின் வளர்ச்சி வேகமடைந்துள்ளது என்றார்.

# தெற்கு காசாவில் உக்கிர மோதலுக்கு இடையே பொதுமக்கள் சிக்கித்தவிப்பு

## உயிரிழந்த பலஸ்தீனர் எண்ணிக்கை 26,000ஐ தாண்டியது



காசாவின் தெற்கு நகரான கான் யூனிஸில் இஸ்ரேலிய இராணுவத்தின் தாக்குதல்கள் மற்றும் பலஸ்தீன போராளிகளுடனான மோதல் உக்கிரமடைந்திருக்கும் சூழலில் அங்கு சிக்கியுள்ள பொதுமக்கள் தொடர்பில் கவலை அதிகரித்துள்ளது.

போர் ஆரம்பத்தில் வடக்கு காசாவை முற்றுகையிட்டு கடல், தரை மற்றும் வான் வழியாக உக்கிர தாக்குதல்களை நடத்திய இஸ்ரேலிய படை தற்போது தெற்கின் மிகப்பெரிய நகரான கான் யூனிஸை சுற்றிவளைத்துள்ளது.

காசாவில் நீடிக்கும் மோதல்களில் கடந்த 24 மணி நேரத்தில் குறைந்தது 183 பேர் கொல்லப்பட்டு மேலும் 377 பேர் காயமடைந்திருப்பதாக காசா சுகாதார அமைச்சு நேற்று (26) கூறியது.

இதன்மூலம் கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக இஸ்ரேலின் இடைவிடாத தாக்குதல்களை எதிர்கொண்டு வரும் காசாவில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 26,000 ஐ தாண்டியுள்ளது. நேற்று வெளியான அறிவிப்பின்படி அங்கு 26,083 பேர் கொல்லப்பட்டிருப்பதோடு மேலும் 64,487 பேர் காயமடைந்துள்ளனர். இதில் 70 வீதத்திற்கும் அதிகமானவர்கள் பெண்கள் மற்றும் சிறுவர்களாவர்.

குறுகலான காசா நிலப் பகுதியில் கான் யூனிஸ் மற்றும் ஏனைய பகுதிகளில் இருக்கும் பொதுமக்கள் நிலை குறித்து சர்வதேச அளவில் கவலைகள் அதிகரித்தபோதும் அங்கு தொடர்ந்து தாக்குதல்களை முன்னெடுத்து வருவதாக இஸ்ரேல் இராணுவம் குறிப்பிட்டுள்ளது.

ஆயுதக் கிடங்குகள், செயற்பாட்டு மையங்கள், கண்காணிப்பு நிலைகள் மற்றும் டாங்கி எதிர்ப்புத் தளங்களை இலக்கு வைத்து வான் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக இஸ்ரேலிய இராணுவம் குறிப்பிட்டது.

அரபு ஊடகத்திற்கான இஸ்ரேலிய இராணுவப் பேச்சாளர் அவிசாய் அன்ட்ராயி, கான் யூனிஸில் கடும் மோதல் இடம்பெற்று வருவதாக குறிப்பிட்டபோதும் அந்தப் பகுதியில் உள்ள மருத்துவமனைகள், தற்காலிக முகாம்கள் மீது இஸ்ரேல் இராணுவம் நடத்தும் தாக்குதல்கள் குறித்து எதுவும் கூறவில்லை.

காசா நகரின் புறநகர் பகுதியில் மேலும் வடக்காக, மனிதாபிமான உதவி விநியோகத்திற்கு காத்திருந்த மக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களில் கடந்த வியாழனன்று 20 பேர் கொல்லப்பட்டு மேலும் 150 பேர் காயமடைந்ததாக பலஸ்தீன சுகாதார அமைச்சு கூறியது.



“உண்பதற்கு ஒன்றும் இல்லாதபோதும் உணவு மற்றும் மாவை பெறுவதற்காக மக்கள் சென்றுள்ளனர்” என்று காயமடைந்தவர்களில் ஒருவரின் சித்தப்பாவான அபூ அத்தா என்பவர் ஏ.எப்.பி செய்தி நிறுவனத்திடம் தெரிவித்துள்ளார்.

“திடீரென்று டாங்கிகள் தோன்றி அங்கிருந்தவர்கள் மீது சுட ஆரம்பித்துள்ளன. அங்குள்ளவர்கள் துண்டுகளாக சிதறியுள்ளனர்” என்றும் அவர் விபரித்தார்.

காசா நகரில் உள்ள அல் ஷிபா மருத்துவமனையில் சடலங்கள் வைக்கப்பட்டிருப்பதாக ஏ.எப்.பி. செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

இது ஒரு பெரும் போர் குற்றம் என்று காசா பகுதியில் ஆட்சியில் உள்ள ஹமாஸ் அமைப்பு குறிப்பிட்டிருப்பதோடு அங்கு இயங்கும் மற்றொரு போராட்டக் குழுவான இஸ்லாமிய ஜிஹாம் அமைப்பு “செல் மற்றும் பீரங்கித் தாக்குதல்களாலேயே” இவர்கள் கொல்லப்பட்டிருப்பதாக தெரிவித்தது.

இதேவேளை மத்திய காசாவை இலக்கு வைத்து இஸ்ரேல் கடந்த வியாழக்கிழமை இரவு தொடக்கம் நடத்திய தாக்குதல்களில் குறைந்தது 14 பேர் கொல்லப்பட்டு பலரும் காயமடைந்ததாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா குறிப்பிட்டுள்ளது.

சவைதி சிறு நகரில் குடியிருப்பு ஒன்றை இலக்கு வைத்து இடம்பெற்ற தாக்குதலில் குழந்தை ஒன்று உட்பட மூன்று பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். தவிர நுஸைரத் அகதி முகாமின் மேற்கில் உள்ள வீடு ஒன்றை இலக்கு வைத்து இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதலில் மேலும் 11 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

முன்னதாக கான் யூசிஸ் நகரில் உள்ள ஐ.நா முகாம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 13 பேர் கொல்லப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் சர்வதேச சட்டங்களை மதிக்கும்படி இஸ்ரேலுக்கு பிரான்ஸ் அழைப்பு விடுத்துள்ளது. இந்தத் தாக்குலுக்கு அமெரிக்கா ஏற்கனவே கண்டனம் வெளியிட்டிருந்தது. எனினும் இதற்கு இஸ்ரேல் மீது நேரடியாக குற்றம்சாட்டப்படவில்லை.

இந்த முகாம் மீது செல் தாக்குதலே இடம்பெற்ற நிலையில் 2007 ஆம் ஆண்டு தொடக்கம் காசாவில் ஹமாஸ் ஆட்சி புரிந்தபோதும் அங்கு இஸ்ரேல் இராணுவம் மாத்திரமே டாங்கிகளை பயன்படுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது.

கான் யூனிஸில் தாக்குதல்கள் தீவிரம் அடைந்திருக்கும் சூழலில் மக்கள் மேலும் தெற்காக எகிப்து எல்லையை ஒட்டிய ரபாவை நோக்கிய வெளியேற ஆரம்பித்துள்ளனர். ஏற்கனவே காசாவில் அதிக சனநெரிசல் மிக்க பகுதியாக மாறியிருக்கும் ரபா பகுதியில் ஒரு மில்லியனுக்கும் அதிகமானோர் அடைக்கலம் பெற்றிருப்பதோடு அங்குள்ள தற்காலிக முகாம்களில் மக்கள் நிரம்பி வழிகின்றனர். கார்கள், கழுதை வண்டிகள் மற்றும் இழுவை வண்டிகளிலும் கால் நடையாகவும் மக்கள் மேலும் தெற்காக பயணித்து வருகின்றனர். “நான் எங்கே செல்வது என்று எனக்குத் தெரியவில்லை” என்று அவ்வாறு பயணிக்கும் மூசா அபூ யுஸப் குறிப்பிட்டார். “என்னுடன் போர்கள், விரிப்புகள், கூடாரங்கள் என்று எதுவும் இல்லை” என்றார்.

இஸ்ரேலின் சரமாரித் தாக்குதலுக்கு மத்தியில் காசாவின் 2.4 மில்லின் மக்கள்தொகையில் கிட்டத்தட்ட அனைவரும் போல் தமது வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இஸ்ரேலின் முற்றுகை மற்றும் தாக்குதல்களால் அங்கு உணவு, நீர், மருந்து மற்றும் எரிபொருளுக்கு கடும் தட்டுப்பாடு நிலவி வருகிறது.

இந்நிலையில் காசாவில் பிடிபட்டிருக்கும் பணயக்கைதிகளின் குடும்பத்தினர் உட்பட ஆர்ப்பாட்டக்காரர்கள் காசாவுக்கு உதவிகள் செல்லும் இஸ்ரேலின் கெரெம் ஷெலோம் எல்லை கடவையை மூன்றாவது நாளாகவும் முடக்கியுள்ளனர்.

இதேவேளை போர் நிறுத்த முயற்சியாக அமெரிக்க உளவுப் பிரிவான சி.ஐ.ஏ. பணிப்பாளர் வில்லியம் பர்ன்ஸ் விரைவில் ஐரோப்பா சுற்றுப் பயணம் மேற்கொண்டு இஸ்ரேல் மற்றும் எகிப்து உளவுப் பிரிவு தலைவர்கள் மற்றும் கட்டார் பிரதமரை சந்திக்கவிருப்பதாக அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதன்போது பர்ன்ஸ் புதிய சுற்று பேச்சுவார்த்தைகளை நடத்தவிருப்பதாக நியூயோர்க் டைம்ஸ் மற்றும் வொஷிங்டன் போஸ்ட் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டபோதும் அமெரிக்க உளவுப் பிரிவு மற்றும் வெள்ளை மாளிகை அவரது பயணத் திட்டத்தை உறுதி செய்ய மறுத்துள்ளன.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் மீதான பலஸ்தீன போராளிகளின் தாக்குதலை அடுத்து ஆரம்பமான இந்தப் போரில் தொடர்ந்து 132 பணயக்கைதிகள் காசாவில் பிடித்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களை விடுவிப்பது மற்றும் அதற்கு பகரமாக இஸ்ரேலிய சிறையில் இருக்கும் பலஸ்தீனர்களை விடுவிப்பது மற்றும் போர் நிறுத்தம் ஒன்றை எட்டுவதற்கான பேச்சுவார்த்தைகள் தீவிரமாக இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.